1704

ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

SEPTEMBER—1956

1704
3-56

கல்விச் சர்வே சிறப்பு அதிகாரி

திரு. K. L. பழனிசாமி, B. A., L. T.,

JL
N15 வை1, N140.
N56·17·9
186309

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : ...வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 17 } செப்டம்பர் 1955 { இதழ் 9

186309

ஒரே ஒரு மருந்து!

கோவை மாவட்டத்தில் கணியூர் என்றோர் சிற்றூர்.

அங்கே தண்டபாணி ஆரம்பப் பள்ளி என்னும் ஓர் உதவி பெறும் பள்ளிக்கூடம்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் மேனேஜர், அதைப் பார்வையிடுவதற்கான வசதிகளைக் கல்வி இலாகா அதிகாரிகளுக்குச் செய்துதரவில்லை என்கிற காரணத்தையும், இவைபோன்ற இன்னும் பிற காரணங்களையும் முன்வைத்து, கோவை மாவட்டக் கல்வி அலுவலர் (டி. இ. ஓ), அந்தப் பள்ளிக்கூடத்தின் அரசாங்க அனுமதியை 1—10—55 முதல் திரும்பப் பெற்று விட்டதாக 12—9—55 அன்று அந்தப் பள்ளிக்கூட மேனேஜருக்கு ஓர் அறிவிப்பை அனுப்பியிருக்கிறார்.

அறிவிப்புக் கிடைத்ததும், அந்த அறிவிப்பின் முடிவு நியாயமானதல்ல என்பதை எடுத்து விளக்கி முடிவை மாற்றியமைக்கும்

படி வேண்டி, டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு மேனேஜர் ஓர் கடிதம் தீட்டினர்.

ஆனால் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அந்தக் கடிதத்தின் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல், டி. இ ஓ பிறப்பித்த உத்தரவு நியாயமானதே என்று அறிவித்து விட்டார்.

மீண்டும் ஓர் முறை மேனேஜர், டி. இ. ஓ—டிவிஷனல் இன்ஸ்பெக்டர்—இரு சாராரும் அளித்துள்ள தீர்ப்பு சரியல்ல என்பதை எடுத்துக்காட்டி டி. பி. ஐ (மாகாணக் கல்வி அதிகாரி) அவர்களுக்கு ஒரு முடங்கல் அனுப்பினர்.

முடங்கலைக் கண்ட டி. பி. ஐ அவர்களும், டி. இ. ஓ—டிவிஷனல் இன்ஸ்பெக்டர்—ஆகிய இருவரும் அளித்த தீர்ப்பே நல்ல தீர்ப்பு என்றும், அதனை மாற்றி யமைக்கவேண்டிய தேவை ஏதுமில்லை என்றும் அறிவித்துவிட்டார்.

இத்தனை நடைமுறைகளுக்குப் பிறகு, வேறு வழியில்லாமல், கணியூர் மேனேஜர், இந்த மூன்று தறத்தாரின் தீர்ப்புகளையும் எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் ஓர் மனுவைத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி அவர்கள், டி. இ. ஓ—டிவிஷனல் இன்ஸ்பெக்டர்—டி. பி. ஐ ஆகிய மூவரின் உத்தரவுகளும் சட்டப்படி செல்லமாட்டா என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்.

ஆரம்பப் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அரசாங்க அங்கீகாரத்தை ரத்து செய்கிற அதிகாரம், கல்வி இலாகா விதிகளின்படி, டி. பி. ஐ அவர்களுக்கு மட்டுமே இருக்கிறது என்றும், அவருக்குக் கீழே இருக்கும் கல்வி அதிகாரிகளுக்கு அத்தகைய அதிகாரம் கிடையாது என்றும், ஆகவேதான் கணியூர் பள்ளிக்கூட அங்கீகாரத்தை ரத்து செய்த டி. இ. ஓ வும், டிவிஷனல் இன்ஸ்பெக்டரும் பிறப்பித்த உத்தரவுகள் செல்லாது போகின்றன என்றும், நீதிபதி அவர்கள், தெளிவான விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

டி. பி. ஐ அவர்களைப் பொறுத்தவரையில், பள்ளிக்கூட அங்கீகாரத்தை ரத்து செய்கிற அதிகாரம் உண்டு என்றாலும், கணியூர் பள்ளிக்கூட அங்கீகாரத்தை ரத்து செய்து அவர் பிறப்பித்திருக்கிற உத்தரவில், அப்படி அவர் செய்வதற்கான காரணங்கள் இன்னவை என்பது அதில் தெரிவிக்கப்படவில்லை. எப்போது யார் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும் அப்படி எடுப்பதற்கான காரணங்களைச் சொல்லியாக வேண்டும். டி. பி. ஐ. அவர்கள் தான் நடவடிக்கை

எடுப்பதற்கான காரணங்களைத் தன்னுடைய ரத்து உத்தரவில் தெரிவிக்காத காரணத்தால், அவருடைய உத்தரவும் சட்டத்திற்குப் புறம்பானது—ஆகவே செல்லாததாக ஆகிவிட்டது என்பதையும், நீதிபதி அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

நீதிபதி அவர்களின் தீர்ப்பிலிருந்து ஒரு பொருள் வெள்ளிடை மலையென விளங்குகிறது.

டி. இ. ஓ அவர்களும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்களும், சட்டப்படி தங்களுக்கு இல்லாத ஓர் அதிகாரத்தை இருப்பதாக எண்ணிக்கொண்டு, எடுக்கக்கூடாத ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதே அந்தப் பொருள்.

சட்டப்படி தங்களுக்குள்ள அதிகார எல்லை எதுவரை உண்டு என்பதைக்கூட ஆர அமர எண்ணிப்பாராமல் அவசர அவசரமாக அவர்கள் இருவரும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் விளைவாகக் கணியூர் மேனேஜருக்கு ஏற்பட்டுவிட்ட காலக்கேடும், வேலைத் தொல்லையும், பண இழப்பும் எவ்வளவு அதிகம் என்பதைத்தான் நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

உயர்நீதி மன்றம் சென்றாவது நீதியை நிலை நாட்டியாகவேண்டும் என்கிற ஆர்வமும், அந்த ஆர்வத்தை நடைமுறைக் கேதமாக்குவதற்குத் தேவையான ஓய்வும், பணமும், ஏனைய வசதிகளும் கணியூர் மேனேஜருக்கு இருந்த காரணத்தால் நீதி அவரை நாடி வந்திருக்கிறது.

ஆனால் அத்தகைய ஓய்வும் ஆர்வமும் பணவசதியும் பிற வசதிகளும் அவருக்கு இல்லாமல் இருந்திருக்குமானால் அவருடைய நிலை... உண்மையிலேயே பரிதாபமாகத்தானே இருந்திருக்கும்!

நீதிமன்ற வழக்கின் முழு விவரத்தையும் இந்த இதழின் வேறோர் இடத்தில் வெளியிட்டிருக்கிறோம். ஏறத்தாழ இது போன்ற இன்னோர் வழக்கையும், அந்த வழக்கிலேயும் இது போலவே கல்வி அதிகாரிகளின் தீர்ப்பு செல்லாமற்போன வரலாற்றையும் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். அதற்கு முன்பு ஓர் முறை இதுபோன்ற வேறோர் வழக்கின் தீர்ப்பை அறிவித்திருந்தோம். இதுபோன்ற வழக்குகள் பற்பல நீதிமன்றத்திற்கு அடிக்கடி வந்தபடி இருக்கின்றன என்பதை, இந்து, மெயில் முதலிய நாளிதழ்கள் தெரிவித்தபடி இருக்கின்றன. அத்தனை வழக்குகளையும் வெளியிட நம் இதழில் இடம் போதாத காரணத்தால். எடுத்

துக்காட்டுகளாக விளங்குவதற்காக இரண்டோர் வழக்குகளை மட்டும் வெளியிட்டிருக்கிறோம்.

சென்னை மாநிலத்தில் தற்போதுள்ள நடைமுறைப்படி, பள்ளிக்கூட மேனேஜர் ஒருவருக்கும் டிபுடி இன்ஸ்பெக்டருக்கும் ஏதாவது சிக்கல் அல்லது தகராறு ஏற்பட்டால், மேனேஜர், டி. இ. ஓவுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. டி. இ. ஓ. வின் தீர்ப்பு சரியில்லையென்றால் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கும், அவருடைய தீர்ப்பிலும் திருப்தியில்லையென்றால், டி. பி. ஐ. அவர்களுக்கும் மனுச் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு கல்வி அதிகாரியிடம் தகராறு ஏற்பட்டால் அவருக்கு மேற்பட்ட நிலையில் உள்ள கல்வி அதிகாரிக்கு மனுச் செய்துகொள்வது என்கிற இந்த ஏற்பாடு, நியாயத்தை நிலை நாட்டுந் திறமையும் தகுதியும் படைத்ததாக இல்லை. இத்தகைய ஏற்பாட்டால், மிகப் பல சமயங்களில், அநீதியே அரியாசனத்து அமரும் அறம்பிறழ்ந்த நிலை உருவாகிவிடுகிறது.

ஒரு கல்வி அதிகாரிக்கும் ஒரு மேனேஜருக்கும் தகராறு ஏற்பட்டு, அந்தத் தகராறில் கல்வி அதிகாரியின்மீதுதான் குற்றம் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கினால்கூட, அந்த உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, அதற்கு ஏற்றபடி தம் தீர்ப்புகளை வழங்கும் நெஞ்சு உரம் மிகச் சில மேலதிகாரிகளிடம் தான் இருக்கமுடிகிறது. ஏனைய மேலதிகாரிகளெல்லாம், என்ன இருந்தாலும் தங்களுடைய இலாகாவில் உள்ள ஒருவரின் குற்றத்தை வெளிப்படுத்தல் ஆகாது என்கிற மனப்பான்மையுடன்தான் நடந்துகொள்கின்றனர். அவர்கள்மீது குற்றம் சொல்லியும் பயனில்லை. அவர்களுடைய சூழ்நிலை அந்த வகையாக அமைந்திருக்கிறது. கல்வி இலாகாவில் உள்ள ஓர் அதிகாரியின் தவறை அதே இலாகாவில் உள்ள மற்றோர் அதிகாரி எடுத்துக்கூறுவது என்றால், அது மிகவும் சிரமமான செய்கைதான்.

எனவே இப்படிப்பட்ட இக்கட்டான நிலையிலிருந்து கல்வி அதிகாரிகளை விடுவிக்கவும், அதிகாரிகளுக்கும் மேனேஜர்களுக்கும் இடையே ஏற்படுகிற சிக்கல்களை நேர்மையான முறையில் தீர்க்கவும், ஒரே ஒரு வழிதான் உண்டு.

கல்வித்துறை விசாரணை மன்றங்கள் (Education Tribunals) அமைப்பதே அந்த வழி.

மாவட்டத்திற்கு ஒன்று வீதம் இப்படிப்பட்ட மன்றங்களை அமைக்கலாம்.

இத்தகைய மன்றங்களில், முதிர்ந்த அநுபவம் படைத்த ஆசிரியர்களும், தேர்ந்த பயிற்சி வாய்ந்த மேனேஜர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும் இடம் பெறலாம்.

அல்லது இந்த மூன்று திறத்தாருள் எவரும் இல்லாமல், ஓய்வு பெற்ற ஜில்லா நீதிபதிகள் மட்டுமே இடம் பெறலாம்.

ஒவ்வோர் மாவட்டத்திலும், மேனேஜர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் ஏற்படுகிற எல்லாச் சிக்கல்களையும் தீர்த்துவைக்கும் அதிகாரம் இந்த மன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேனேஜர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் இடையே மட்டுமல்ல, மேனேஜர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஏற்படுகிற சிக்கல்களையும் இந்த மன்றம் தீர்த்துவைக்க வேண்டும்.

ஆசிரியர்கள்—மேனேஜர்கள்—கல்வி அதிகாரிகள் ஆகிய மூன்று சாராருக்கிடையே ஏற்படுகிற எல்லாத் தகராறுகளையும் இந்த மன்றம் சிறந்த முறையிலேயும் குறைந்த செலவிலேயும் தீர்த்துவைக்கமுடியும்.

இத்தகைய மன்ற அமைப்பால் ஆசிரியர்களுக்கும் நன்மை. மேனேஜர்களுக்கும் வசதி. கல்வி அதிகாரிகளுக்கும் சங்கடமான நிலைமைகள் ஏற்படா. அரசாங்கத்துக்கும் இந்த ஏற்பாடு வசதியாக இருக்கும். தத்தமது நிலையைச் சீர்செய்து கொள்வதற்காக நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை ஏறி இறங்கவேண்டிய தொல்லைகளும் பணச் செலவும் மேற்குறித்த சாரார் எல்லோருக்கும் மிச்சமாகும். உயர் நீதிமன்றம் வரையில் செல்வதற்குத் தேவையான பொருள் வசதி இல்லாத காரணத்தால் தற்போது நீதியைப் பெற முடியாமல் தவிப்பவர்க்கும் இந்த ஏற்பாடு பெறற்கரிய பேறாக விளங்கும்.

தொழிற்சாலை முதலாளி ஒருவருக்கும், அங்குப் பணியாற்றும் தொழிலாளி ஒருவருக்குமிடையே, தொழிலாளியை வேலையிலிருந்து விலக்குவது பற்றியோ, தரப்பட வேண்டிய சம்பளப் பாக்கியைப் பற்றியோ, இன்னபிற பிரச்சினைகள் குறித்தோ சிக்கல் தோன்றுமானால், அத்தகைய சிக்கலைத் தீர்த்து வைக்க தொழில் துறை விசாரணை மன்றங்கள் (Labour tribunals) இருந்து வருகின்றன. இத்தகைய மன்றங்கள் இருந்து வருவதால்தான், நீதிமன்றங்களுக்குப் போவதற்குத் தேவையான அளவு வசதி இல்லாத தொழிலாளிகள் எளிதில் நீதியைப் பெற இயல்கிறது.

ஏறத்தாழ இதே வகை நியாயத்தை முன்வைத்துத்தான், இட்டத்தட்ட இதே வகை விசாரணை மன்றங்கள், ஆரம்பக் கல்வித்

துறைக்கும் ஏற்படவேண்டும் என்று நாம் பெரிதும் விரும்புகிறோம்.

திட்டவட்டமாகவே தெரிவிக்க ஆசைப்படுகிறோம் :— ஆசிரியர்களுக்கும், மேனேஜர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்குமிடையே ஏற்படுகிற தகராறுகளைச் சீரியமுறையில் தீர்ப்பதற்கான ஒரே ஒரு வழி, ஒரே ஒரு பரிகாரம், ஒரே ஒரு மருந்து விசாரணை மன்ற அமைப்புத்தான். அதிலே துளியும் ஐயம் இல்லை.

சிந்தனைக் குவியல்

(தொகுப்பாளர் :—துரை. முருகேசன்) (டி. எம்மென்) காரமடை

(1) கலைகளை ரசிக்கவும், பிறரது இன்ப துன்பங்களையறியவும் தெரியவேண்டும். இவற்றில் பயிற்சியளிப்பதே கல்வியின் நோக்கமாயிருத்தல் வேண்டும்.

—ஐன்ஸ்டீன்.

(2) சமுதாயத்தின் மூலம் தனி நபர் முக்கியத்துவம் பெறுகிறான்: தனி நபர் மூலம் சமுதாயம் செயலாற்றும் தன்மை பெறுகிறது.

—இக்பால்.

(3) உன் குறிக்கோளையடைய ஆயிரந்தடவை முயற்சி செய்; ஆயிரந்தடவை தவறினாலும் இன்னும் ஒருமுறை முயற்சி செய். இறுதிவரைக்கும் முயற்சியை மட்டும் கைவிடாதே.

—விவேகானந்தர்.

(4) பூமியின் நான்கு திக்குகளிலும் பிரயாணம் செய்தாலும் உண்மையான தர்மத்தை ஓரிடத்தும் நீ காணமாட்டாய் இருப்பதெல்லாம் உன் உள்ளத்திலேயே இருக்கிறது.

—பரமஹம்ஸர்

காலமும் கருத்தும்

இது முறையா ?

இது முறையா? இது தருமா? இதுதான் சரியான வழியா? இப்படி நடந்தால் மக்களாட்சிக் கோட்பாடு தழைத்து ஓங்கி வளருமா?— இப்படியெல்லாம் தான் கேட்க வேண்டியிருக்கிறது அனைத்திந்தியத் தேர்தல் அதிகாரி திருவாளர் சுகுமார் சென் வெளியிட்டுள்ள ஒரு முடிவைக் காணும்போது. வருகின்ற பொதுத் தேர்தலில், இதற்கு முன் போட்டியிடாத எந்தப் புதிய கட்சியாவது கலந்து கொள்ளுமானால், அந்தக் கட்சிக்குத் தேர்தல் சின்னம் எதையும் வழங்க முடியாது என்று திருவாளர் சென் அறிவித்துள்ள முடிவைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். எந்த நாட்டிலாவது ஜனநாயகத் தத்துவம் செழித்து வளர வேண்டுமானால் அந்த நாட்டில் பலம் பொருந்திய எதிர்க்கட்சிகள் இருந்தாக வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். கட்டுக்கோப்பும் போதிய வளர்ச்சியுமுள்ள எதிர்க்கட்சிகள் ஏற்கெனவே இல்லாமல் இருக்குமானால், அத்தகைய எதிர்க் கட்சிகளை உருவாக்குவதும், அவற்றை வளர வைப்பதும், அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவகை உதவிகளையும் தளராமல் செய்வதும் நாட்டின் நலன் நாடும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் அத்தனைப் பேருடைய கடமைகளாகும். ஏனெனில், பலமான எதிர்க்கட்சிகள் இல்லாவிட்டால், ஆளும் கட்சியினர் செய்யக்கூடிய தவறுகளையும் பித்தலாட்டங்களையும் அலசிக் காட்டி ஆராய்ந்து விளக்க ஆள் இல்லாமற் போய்விடும். தன்னைத் தட்டிக் கேட்பார் எவரும் இல்லை என்று தெரிந்தால், ஆளும் கட்சி, சர்வாதிகாரப் பாதையில் புகுந்து, மனம்போன போக்கில் நடந்து, மக்களுடைய வாழ்க்கையை வேதனையின் வடிவமாக மாற்றிவிடக்கூடும். இப்படிப்பட்ட விபரீத நிலைமைகள் உருவாகாமல் இருக்கத்தான் எதிர்க்கட்சிகளின் அமைப்பும் வளர்ச்சியும் அவசியம் அவசியம் என்று நல்லறிவாளர்கள் எப்போதும் தெரிவிக்கின்றனர். ஆனால் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ள முடிவு, எதிர்க் கட்சிகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்துத் தருவதா என்றால், நிச்சயமாக இல்லை. வளரும் கட்சிகளுக்குக் குறுக்கே கிடத்தப்படுகிற முட்டுக் கட்டைகளில் ஒன்றாகவே அந்த முடிவு காட்சியளிக்கிறது. குறிப்பிட்ட ஒரு கட்சியின் அபேட்சகர்கள் எந்தெந்தத் தொகுதிகளில் நின்றாலும், எல்லாத் தொகுதிகளிலும்

அவர்களுக்கு ஒரே சின்னம் வழங்கப்பட்டால், அந்தக் கட்சிக்கு, தேர்தல் பிரசாரம் செய்ய எளிதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, காங்கிரஸ் கட்சிக்கு, "இரண்டு மாடுகளும் ஒரு கலப்பையும்" என்பது, தேர்தல் சின்னமாக வழங்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, காங்கிரசை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம் செய்பவர்கள், மாட்டுப் பெட்டிக்கே ஓட்டுப் போடுங்கள் என்று, மிக எளிதில்—பாமரருக்கும் புரியும் வகையில் தெரிவிக்க முடிகிறது. இத்தகைய மிக முக்கியமானதோர் வசதியைத்தான் புதிய கட்சிகளுக்கு அளிக்க மறுக்கிறார் திருவாளர் சென். டாக்டர் லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த மராட்டிய சமிதி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பல கட்சிகள் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் முதன் முறையாகக் கலந்துகொள்ள இருக்கின்றன. இந்த கட்சிகளுக்கெல்லாம் பெரியதோர் வசதிக் குறைவாக இருக்கும் திருவாளர் சென் தெரிவித்துள்ள முடிவு. எத்தகைய கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, இத்தகைய முடிவுக்கு நியாயமான காரணம் எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. எனவே உடனடியாக இந்த முடிவை மாற்றி, புதிய கட்சிகளுக்கும் தேர்தல் சின்னம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டியது இந்திய அரசாங்கத்தின் தலையாய கடமை ஆகும்.

எவர் மீது குற்றம் ?

குற்றம் செய்தவர்கள் யார் யார்? செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவேண்டிய நேரத்தில் செய்யாமல் போனவர் எவர் எவர்? அப்படிச் செய்யாமல் விடுத்து இப்படிப்பட்ட பயங்கரமான விபத்து ஏற்படுவதற்கு வழி வகுத்துத் தந்தவர்கள் எவர் எவர்? இந்தக் கேள்விகளைத்தான், செப்டம்பர் முதல் தேதி முதல், இந்தியப் பொது மக்களின் உள்ளம், கேட்டபடி இருக்கிறது. செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று, ஐதராபாத்தில், மிகப் பயங்கரமான ரயில் விபத்து ஒன்று நடைபெற்றிருக்கிறது. அன்று இரவு, செகந்தராபாத்திலிருந்து புறப்பட்டு துரோணசலம் என்னும் இடத்திற்குச் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் ரயில் வண்டி, ஜாட்சேர்லா—மகபூப் நகர் ஆகிய இரண்டு ரயில் நிலையங்களுக்கு இடையே, விபத்துக்கு ஆளாகியிருக்கிறது. இந்த இரு நிலையங்களுக்கு இடையே இருபது அடி நீளமுள்ள சிறிய பாலமொன்று இருக்கிறது. அந்தப் பாலத்தின் மீது ரயில் செல்லும்போது பாலம் உடைபட்டு, பாலத்தின் கீழ் ஓடிக் கொண்டிருந்த ஆற்று வெள்ளத்தில், ரயில் எஞ்சினும், பிரயாணிகள் ஏறியிருந்த இரண்டு பெட்டிகளும் உருண்டு விழுந்திருக்கின்றன. விழுந்த வேகத்திலும் அதிர்ச்சியிலும், அந்த இரு பெட்டிகளும் நொறுங்கிப் போயிருக்கின்றன.

விபத்து நேரிட்ட நேரம் இரவு 12—45 மணி அடர்ந்த இருள் எங்கும். கடுமையான மழை வேறு சுழன்று அடித்தபடி இருந்தது. எனவே விபத்துக்கு ஆளான பிரயாணிகளுக்கு, உடனடியாக உதவி எதுவும் கிடைக்கவில்லை. 116 பேர் உயிரிழந்து விட்டனர். ஏறத்தாழ நாற்பது பேர் படுகாயத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். மறுநாள் காலையில் வெள்ளம் வடிந்து நிலைமை சீர்ப்பட்ட பிறகுதான் உயிரிழந்தோரின் உடல்களைக் கண்டு பிடிக்க முடிந்திருக்கிறது. உயிருக்கே மன்றாடிக் கொண்டிருந்த ஏனைய பலரைக் காப்பாற்றி மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு செல்லும் பணியும் அதற்கு அப்புறம்தான் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. விபத்தைப் பற்றிய விவரங்களைப் படிக்கப் படிக்க உள்ளம் பதறுகிறது; வேதனை வளர்கிறது.

ஒவ்வோர் ரயிலும், ஒரு ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டவுடனே, அந்த நிலையத்து ஸ்டேஷன் மாஸ்டர், இன்ன ரயில், இத்தனை மணி இத்தனை நிமிஷத்திற்கு இந்த நிலையத்திலிருந்து புறப்பட்டு விட்டது என்கிற தகவலை 'ரயில்வே கண்ட்ரோல்' என்கிற அமைப்புக்குத் தெரிவிக்க வேண்டும். அதுபோலவே, அடுத்த ரயில் நிலையத்து ஸ்டேஷன் மாஸ்டர், அந்த ரயில் தன் நிலையத்தை அடைந்ததும், இன்ன ரயில் இத்தனை மணி இத்தனை நிமிஷத்துக்குத் தன் நிலையத்துக்கு வந்துவிட்டது என்கிற தகவலை ரயில்வே கண்ட்ரோலுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த இரண்டாவது தகவல், நியாயமாக வந்து சேரவேண்டிய நேரத்திற்குள் கிடைக்காவிட்டால் உடனடியாக, ஏன் இன்னமும் ரயில் அடுத்த நிலையத்தை அடையவில்லை என்பதைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு ரயில்வே கண்ட்ரோலைச் சேர்ந்தது. ரயில்கள் போக்குவரத்து பற்றி இந்தியாவில் நடைமுறையில் உள்ள திட்டம் இது.

ஆனால் ஐதராபாத்தில் உள்ள ரயில்வே கண்ட்ரோல் இந்தத் திட்டப்படி நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஜாட்சேர்லா என்னும் இடத்திற்கும் மகபூப் நகர் என்னும் இடத்திற்கும் இடையே உள்ள தூரம் 12 மைல்கள்தான். எனவே, ரயில், இந்தத் தொலைவைக் கடப்பதற்குத் தேவைப்படும் நேரம் 15 அல்லது 20 நிமிடங்கள்தான். 20 நிமிடங்களில் வந்து சேர வேண்டிய ரயில், முக்கால் மணி அல்லது ஒரு மணி நேம் ஆன பிறகும் வந்து சேராததைக் கண்ட ரயில்வே கண்ட்ரோல், உடனடியாக அடுத்த ஸ்டேஷன் மாஸ்டரை ரயில்வே டெலிபோன் மூலம் கூப்பிட்டு, ஏன் இன்னமும் ரயில் வந்து சேரவில்லை என்பதை விசாரித்து, ரயில் பாதையில் ஆட்களை அனுப்பி நிலைமையைக் கண்டறிய ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். ஆனால், செகந்தரா

பாத் ரயில்வே கண்ட்ரோலோ, ஒரு மணி நேரம் அல்ல, மூன்று மணி நேரம் ஆனபிறகும்கூட ரயில் ஏன் அடுத்த நிலையத்தை அடையவில்லை என்பதை ஆராய்ந்து அறிந்ததாகவே தெரியவில்லை. ரயிலில் வந்த ஒரு பிரயாணி, தன்னுடைய சைகிளை எடுத்துக் கொண்டு, கொட்டும் மழையில், அடர்ந்த இருளில், ஆறு மைல் தூரம் பயணம் செய்து, அடுத்த ஸ்டேஷன் மாஸ்டருக்குச் செய்தியைத் தெரிவித்த பிறகுதான், தகவல், ரயில்வே அதிகாரிகளுக்குக் கிட்டியிருக்கிறதே தவிர, இப்படிப் பட்ட விபத்துகள் நேரிட்டால் அவற்றைக் கண்டறிய இரயில்வே இலாகாவில் ஏற்படுத்தியுள்ள முறைப்படி அவர்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. இவ்வளவு பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்ட ரயில்வே அதிகாரிகள் யார் என்பதைத் தயவு தாட்சண்யம் அற்ற முறையில் கண்டு பிடித்து அவர்களைத் தக்க முறையில் தண்டிக்க வேண்டியது இந்திய அரசாங்கத்தின் முதற்பெருங் கடமையாகும்.

மகபூப் நகர் ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் தலைவர், விபத்து நேரிடுவதற்கு ஒரு நாள் முன்னதாகவே, குறிப்பிட்ட பாலம் படுமோசமான நிலையில் இருக்கிறது என்றும், அந்தப் பாலத்தின் மீது ரயில்களை ஓட விடுவது பேராபத்து என்றும், ரயில்வே அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறாராம். இப்படி ஓர் எச்சரிக்கை செய்யப்பட்ட பிறகும்கூட அதனை ரயில்வே அதிகாரிகள் ஏன் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டார்கள் என்பதையும் இந்த விபத்தைப் பற்றிய விசாரணையின் போது நாடு தெரிந்துகொண்டாக வேண்டும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்திய அரசாங்கம், குற்றம் புரிந்தவர்களை மூடி மறைத்துக் காப்பாற்ற எண்ணக்கூடாது. உண்மைக் குற்றவாளிகள் ஊரார் முன்னிலையில் நிறுத்தப்பட்டுக் கடுமையான முறையில் தண்டிக்கப்பட்டால்தான் இப்படிப்பட்ட பயங்கரமான விபத்துகள் இனியாவது நடைபெறாமல் இருக்கும். சென்ற சில ஆண்டுகளாக இப்படிப்பட்ட ரயில் விபத்துகள் அடிக்கடி நடைபெறத் தொடங்கி விட்டன. இவற்றின் விளைவாக, இந்திய ரயில்களில் பயணம் செய்வதே பேராபத்துக்குரிய ஓர் செயல் என்கிற எண்ணம் பொது மக்களிடையே வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியரயில்வேயின் மீது படிந்துள்ள இந்த மாசு உடனடியாகத் துடைக்கப்பட வேண்டுமானால், ஐதராபாத் ரயில் விபத்து பற்றி அச்சம் தயை தாட்சண்யமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். இந்த விசாரணையின் போக்கையும் விளைவையும் வைத்துத்தான் இந்திய ரயில்வேயின் எதிர்காலப் புகழ் கணிக்

கப்பட இருக்கிறது என்று சொன்னால் அதில் துளியும் தவறு இருக்க முடியாது.

வாழ்க வவ்வேரு!

ஆந்திர மாநிலத்தில் உள்ள மிகச் சிறியதோர் கிராமம், வவ்வேரு. ஆனால் அந்தச் சிறிய கிராமம் ஆற்றியுள்ள அரியபணி ஒன்றின் காரணமாக அதன் பெயர் அகில இந்தியாவிலும் பரவி விட்டது. "பெண்ணடிமை தீரும் மட்டும் பேசுந் திரு நாட்டு மண்ணடிமை தீர்ந்து வரல் முயல் கொம்பே" என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அந்த இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்கியிருக்கின்றனர் வவ்வேரு கிராம மக்கள். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பாடுவதோடு தங்கள் கடமை தீர்ந்து விட்டது என்று எண்ணி ஒதுங்காமல், அந்தக் கிராம மக்கள், பெண்களை அடிமை செய்யும் பேதமைப் புத்தியை, தங்கள் அருஞ்செயல் ஒன்றின் மூலம் மண்டையில் அடித்து மாய்த்துவிட்டிருக்கின்றனர். அந்தக் கிராமத்துப் பஞ்சாயத்துப் போர்டு, எட்டு உறுப்பினர்களைக் கொண்டது. அந்த எட்டு இடங்களுக்கும் பெண்களையே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர் அந்தக் கிராம வாசிகள். முற்றிலும் பெண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு பஞ்சாயத்துப் போர்டு அமைவது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று கேட்கும் "பேரறிவாளர்கள்" பலர் இன்னமும் மண்டிக் கிடக்கிற இந்த நாட்டில், ஒரு கிராமத்தின் ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் பெண்களிடமே ஒப்படைக்கும் அளவுக்கு முற்போக்கு ஆர்வம் படைத்திருக்கின்றனர் வவ்வேரு வாசிகள் என்றால், அதனை, யார்தானாகட்டும், எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? பெண்கள் சமுதாயம், மனித குல எண்ணிக்கையில் ஏறத்தாழப் பாதி அளவினதாகும். இவ்வளவு பெருந்தொகையாக உள்ளவர்களை அடக்கி ஒடுக்கி மூலையில் தள்ளி முக்காடிட்டு வைத்து விட்டால், மனித சமுதாயம் முன்னேறுவது என்பது எப்படி இயல்வதாகும்? ஒரு கண்ணுக்கு வெண்ணெய், இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்றால், அது எப்படி நேர்மையானதாகும்? தாய்க் குலத்திற்குக் கல்வியும் சொத்தும் உரிமையும் வசதியும் அளிக்காவிட்டால், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் மட்டும் அறிவும் திருவும் ஆற்றலும் உயர்வும் படைத்தவர்களாக எப்படி இருந்திட முடியும்? வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகளுக்கும் ஒத்த நிலை இருந்தால்தான் வண்டி ஒழுங்காக ஓடுமே தவிர, ஒவ்வோர் மாட்டிற்கு ஒவ்வோர் நிலை என்றால் வண்டி எப்படி ஓடும்!

இந்த உண்மைகளையெல்லாம் தெள்ளத் தெளிவாக உணர்ந்து, பெண்கள் சமுதாயத்திற்குப் பெரியதோர் பொறுப்பையும், அதைவிடப் பெரியதோர் சிறப்பையும் அளித்த வெவ்வேறு கிராமத்தவரை நாடு பாராட்டுகிறது என்றால், அதிலென்ன வியப்பு? ஆம்! ஏனைய மக்களைப் போலவே, "ஆரம்பக் கல்வி"யும் வாழ்க வெவ்வேறு என்று வாயார மனமார வாழ்த்த விழைகிறது.

மற்றுமோர் வாழ்த்து!

பெண்களை இழிவு செய்யும் பேதமையை ஒழித்துக்கட்டிய வெவ்வேறு கிராம வாசிகளைப் பாராட்டி வாழ்த்துகிற இதே நேரத்தில் மற்றுமோர் வாழ்த்தையும் அளிக்க வேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த வாழ்த்தைப் பெறுபவர் மேஜர் வி. பி: படேல் என்கிற சிறந்ததோர் டாக்டராவர். மணிக் கோமேஸ் என்னும் முதியவர் டக்கா என்னும் நகரத்தைச் சேர்ந்தவர். அன்னாரின் வயது 55. ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் திடீரென்று அவர் கண் கண் பார்வையை இழந்துவிட்டார். அதன் காரணமாகத் தன் வேலையையும் பறிகொடுத்துத் தவிக்கலானார். இழந்த பார்வையை மீண்டும் பெற ஏதேதோ முயற்சிகள் செய்து, எந்தெந்த மருத்துவ விடுதிகளுக்கோ சென்று, எதுவும் பயன்தராத காரணத்தால், இறுதிப் புகலிடமாக, கல்கத்தாவிலுள்ள இஸ்லாமியா கண் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அங்கேயுள்ள கண் மருத்துவ வல்லுநர் டாக்டர் வி. பி. படேல், முதியவரின் வேதனையைக் கண்டு, அதனை எப்படியாவது தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு, புதியதோர் முடிவுக்கு வந்தார். முதியவரின் கண்களை ஆபரேஷன் மூலம் எடுத்துவிட்டு, அவற்றின் இடத்தில் அப்போதுதான் இறந்த கோழி ஒன்றின் கண்களை வைத்துப் பொருத்தினால் முதியவரின் பார்வை திரும்பக்கூடும் என்று கருதினார் டாக்டர் படேல். கருதிய கருத்தைச் செயல் வடிவுக்கு மாற்றினார். விளைவு? மட்டற்ற மகிழ்ச்சி! டாக்டருக்கு மட்டுமல்ல, பார்வையை இழந்த முதியவருக்கும் தான்! ஆமாம்-இழந்த பார்வை, திரும்பியது! ஆறு ஆண்டுகளாகக் கண் பார்வையை இழந்து வாடி வதைப்பட்டுக் கிடந்த முதியவர் மணிக் கோமேஸ், மீண்டும் பார்வையைப் பெற்றுவிட்டார் இப்போது. இழந்த இன்பத்தை மறுபடியும் அடைந்து விட்டார். இறந்து போன மனிதர்களின் கண்களை இறந்தவுடனே அகற்றி, குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்குள், பார்வையை இழந்தவர்களின் கண்களுக்குப் பதிலாகப் பொருத்துவது இதுவரை நடைமுறையில் உள்ள திட்டம். இறந்த மனிதர்களின் கண்கள், உரிய காலத்தில் கிடைப்பது அருபொருளாக இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டம் விரைந்து

பரவ முடியவில்லை. ஆனால் டாக்டர் படேல் இப்போது கண்டுபிடித்துள்ள முறையை மேலும் பலருக்கு நடத்தி அதனை முழு வெற்றி உடையதாக ஆக்கிவிடுவாரானால், பார்வையை இழந்து பரிதவிப்போரின் வேதனையை நிச்சயம் நம்மால் தீர்த்துவிட முடியும். கோழியின் கண்களைப் பொருத்தி மனிதர்களின் பார்வைத் திறனை மீட்க முடியும் என்பதை நிலைநாட்டியுள்ள டாக்டர் படேலின் நுண்ணறிவையும் ஆராய்ச்சித் திறனையும் மனித குல மேம்பாட்டு ஆர்வத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். "எல்லாம் அவன் வகுத்த வழி-நம்மாலே என்ன ஆகும்?" என்று சோம்பேறி வேதாந்தம் பேசிக்கொண்டு மனித குல முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டபடி இருக்கிறார்களே சில "மூதறிஞர்கள்," அவர்களுடைய கண்களைத் திறக்கவேண்டும் இந்தக் கண் திறந்த காரியம். திறக்கும் என்றே நம்புகிறோம்.

சுழலும் வீடு!

ஆமாம் — மெய்யாகத்தான் — சுழலும் வீடு ஒன்றை, கொலம்பஸ் என்னும் இடத்தில், கிளார்க் ரானே என்பவர் அமைத்து முடித்திருக்கிறார். சுழலும் நாற்காலி, சுழலும் மேசை, சுழலும் குழாய்கள் முதலியவற்றை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். ஆனால் சுழலும் வீடு என்பதை இதுவரை நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை அல்லவா? ஆனால் இதோ, தோழர் கிளார்க் ரானே, கொலம்பஸ் நகரத்தில், அத்தகைய ஏற்பாட்டை அமைத்துக் காட்டியிருக்கிறார். அந்த நகரத்தில் அவர் புதிய வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறார். அந்த வீட்டின் இரண்டாவது மாடியில் 18 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்ட அறை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறை, மின்சார இயந்திரம் ஒன்றுடன் பொருத்தப்பட்டிருக்கிற காரணத்தால், அதனை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் திருப்ப முடியுமாம். வலப் புறம், இடப் புறம், முன்புறம், பின்புறம், எல்லாப் பக்கங்களிலும் திருப்புவதற்கு ஏற்ற வகையில், அந்தச் சுழலும் அறை அமைக்கப்பட்டிருக்கிறதாம். சிறிது நேரத்திற்கு ஒரு முறை, தானாகவே, வெவ்வேறு திசை நோக்கித் திருப்பிக் கொள்ளும்படியாகவும் அந்த அறையை அமைத்திட இயலுமாம். இத்தகைய சுழலும் அறைகள் அமைந்த வீடுகள் பலவற்றைக் கட்ட நகராட்சிக் கழகத்திடம் அனுமதி கேட்டிருக்கிறாராம் கிளார்க் ரானே. நம் நாட்டவரைப்போல எல்லாம் எனையாளும் ஈசன் செயல் என்று சொல்லிவிட்டு வாளா கிடக்காமல், விதி விதி என்று வீணுரை வாசித்துவிட்டு விழிநீர் பெருக்கிக் கொண்டும் உள்ளத்தில் வேதனையைச் சுமந்து கொண்டும் திரியாமல், தோழர்

கிளார்க் ரானே, தன் முயற்சியில் நம்பிக்கை கொண்டு தளராது பாடுபட்டிருக்கிறார். எனவேதான், காண்பவர்–கேட்பவர்—எவரும் வியந்து பாராட்டத்தக்க புதுமையை அவரால் உலகுக்கு அளிக்க முடிந்திருக்கிறது. நம் நாடு முன்னேற வேண்டுமானால், நாமும் அறிவின் பாதையில் ஆர்வத்துடன் செல்லும் கிளார்க் ரானேக்களாக மாறவேண்டும். தலைவிதி தத்துவத்திற்குத் தாள் பணிந்து கிடக்குந் தம்பிரான்களாக இருந்து பயனில்லை.

அங்கே—162
இங்கே—19

“தொழில்துறை வளர்ச்சியில் தென்னாடு மிகவும் பின்தங்கியிருக்கிறது என்பதில் இரண்டுபட்ட கருத்தே இருக்க முடியாது. வெறும் பிரசார வசதிக்காகக் கற்பனை செய்யப்பட்ட சுலோகம் அல்ல இது. மத்திய அரசாங்க நிதி அமைச்சராலேயே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற அழுத்தந் திருத்தமான உண்மை இது.”—இந்த வாசகங்களை, வேதனை நிறைந்த உள்ளத்துடன், எடுத்து மொழிந்திருப்பவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணாதுரை அல்ல. திராவிடக் கழக முதல்வர் பெரியார் இராமசாமியும் அல்ல. ஆச்சரியம்—ஆனால் உண்மை சென்னை மாநில நிதி அமைச்சர் திருவாளர் சி. சுப்ரமண்யனார்தான் தூத்துக்குடியில் இந்த வகையாகப் பேசியிருக்கிறார். 7-7-56 அன்று திருவாளர் எஸ். அநந்தராம கிருஷ்ணன் தலைமையில் தூத்துக்குடியில் நடைபெற்ற இரும்பு எஃகு வளர்ச்சி மாநாட்டைத் திறந்துவைத்தபோதுதான் நிதி அமைச்சர் சுப்ரமண்யனார் மேற்படி கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தன்னுடைய கருத்து வெறும் கற்பனையின் அடிப்படையில் எழுந்தது அன்று என்றும், முற்றிலும் உண்மை என்றும் விளக்குவதற்காகத் திரு சுப்ரமண்யம், குண்டா திட்டத்தைத் துவக்கி வைத்தபோது அப்போது இந்திய அரசாங்க நிதி அமைச்சராக இருந்த தேஷ்முக் அவர்கள் தெரிவித்த சில புள்ளி விவரங்களையும் துணைக்கு அழைத்திருக்கிறார். தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்திய அரசாங்கத்தால் செலவிடப்படும் தொகை, அகில இந்தியாவைப் பொறுத்த வரை ஆளுக்கு 27 ரூபாய் என்றும், ஆனால் சென்னை மாநிலத்திற்கு மட்டும் என்று பார்த்தால் அது 19 ரூபாய்தான் ஆகிறது என்றும், வங்காள மாநிலத்திலும் பம்பாய் மாநிலத்திலும் செலவிடப்படும் தொகை அனைத்திந்திய சராசரியைவிட முறையே ஆறு மடங்கும் ஐந்து மடங்கும் அதிகம் என்றும் குண்டா திட்டத் துவக்கத்தின் போது திருவாளர் தேஷ்முக் தெரிவித்தாராம். இந்தப் புள்ளி விவரங்களை முன்னால் கொண்டு

வந்து நிறுத்திக்கொண்டு திரு சுப்ரமண்யம் கேட்கிறார்—சென்னை மாநிலத்திற்கு இவ்வளவுதானா, இது நியாயம்தானா என்று. உண்மை! அமைச்சர் சுப்ரமண்யனாரின் பேச்சில், நியாயம், அதன் முழு அளவிலும் அடங்கியிருக்கிறது. இதனை, எவரும், மறைக்கவோ மறுக்கவோ இயலாது. இதனை மறக்க எண்ணுபவரும், உண்மையில், நாட்டின் நன்மையை விரும்பும் நேர்மையாளராக இருத்தல் இயலாது. முழு இந்தியாவையும் பார்க்கும்போது ஆளுக்கு 27 ரூபாய் செலவிடப்படுகிறது. ஆனால் சென்னை மாநிலத்தை மட்டும் கவனிக்கும்போது ஆளுக்கு 19 ரூபாய்தான் செலவிடப்படுகிறது இதனை மத்திய அரசாங்க நிதி அமைச்சரே ஒப்புக்கொள்கிறார் என்றால், தொழில் துறையில், மத்திய அரசு, சென்னை மாநிலத்தை எந்த அளவு புறக்கணித்திருக்கிறது என்பது யாருக்குத்தான் புரியாமல் இருக்கமுடியும்? வேதனை, அந்த அளவோடாவது முடிவடைகிறதா என்றால், இல்லை! வங்காளத்திற்கு. அகில இந்திய சராசரியைப்போல ஆறு மடங்கு—அதாவது 162 ரூபாய் செலவிடப்படுகிறது அதுபோலவே பம்பாய்க்கு ஐந்து மடங்கு—அதாவது 135 ரூபாய் செலவிடப்படுகிறது. ஆனால் சென்னைக்கோ, வெறும் 19 தான்! சரியா? முறையா? நியாயம்தானா? நேர்மையானதா இந்தப் போக்கு? எதற்காக இப்படிப்பட்டதோர் பயங்கரமானதோர் வேறுபாடு? சென்னை மாநில மக்கள் இப்படியெல்லாம் கேட்கிறார்கள் என்றால், அதிலென்ன குற்றம் இருக்கமுடியும்? வங்காளத்திற்கு 162 ரூபாய்! பம்பாய்க்கு 135ரூபாய்! ஆனால் சென்னைக்கு 19 தானா? 162 எங்கே! 19 எங்கே!! எத்துணைப் பெரிய வேறுபாடு! எவ்வளவு நீண்ட இடைவெளி! இப்படியொரு வேறுபாடு ஏற்பட்டுவிட்டதற்கு டில்லி அரசு ஓராயிரம் காரணங்களைக் கூறினாலும் சரியே, அந்தக் காரணகாரிய விளக்கங்களாலும் சமாதானப் பேச்சுக்களாலும் தென்னாட்டவர் உள்ளம் திருப்தியடைந்துவிடமுடியாது. இந்த மறக்க முடியாத . உண்மையைத்தான், அமைச்சர் சுப்ரமண்யனாரின் தூத்துக்குடிப் பேச்சு தெளிவாக அறிவிக்கிறது. ஆனால் ஒன்று எப்போதோ ஒரு முறை, எங்கோ ஓரிடத்தில், இரண்டோர் சொற்களில் இப்படிப்பட்ட உணர்ச்சிகளைக் கொட்டிவிடுவதோடு தன்னுடைய கடமை முடிந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் கருதுவாரானால் அதனால் இம்மியும் பயன் இல்லை. 162—19—இந்த வேறுபாட்டைக் கண்டு தென்னாட்டு மக்கள் எவ்வளவு கொதிப்பும் கொந்தளிப்பும் அடைந்திருக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கத்திற்கு அவர் தெளிவாக அறிவித்தாகவேண்டும். இந்தக்

கொடுமையைப் போக்குவதற்கு அவரும், முதலமைச்சர் காமராஜர் அவர்களும் முழு மூச்சாகப் பாடுபட்டாக வேண்டும். டில்லி ஆட்சியாளர்களுடன் அவர்கள் சென்னை மாநிலத்திற்கு உரிய பங்கைப் பெறுவதற்காக ஓயாமல் போரிடவும் தயங்கக் கூடாது. உரிமையை வற்புறுத்திப் பேசவும், நியாயத்தை அழுத்தமாகக் கூறவும் இவர்கள் தயங்கியும் மயங்கியும் ஒதுங்கியும் ஒடுங்கியும் இருப்பார்களானால் 162—19—இந்த விபரீதம் கலந்த விசித்திர நிலைமைதான் தொடர்ந்து இடம் பெறும் என்பதை இவர்கள் மறந்திட வேண்டாம்.

சிந்தனைக் குவியல்

(5) இருள் செறிந்த இடத்தில் விளக்கொன்றைக் கொண்டு சென்றால் எவ்வாறு இருள் வெருண்டோடுகின்றதோ, அதே போன்று இன்ப எண்ணங்களை எண்ணுவாயாயின் கவலை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

—அப்துர்-ரஹீம்.

(6) உன்னுடைய மதிப்பு, புகழ், முன்னேற்றம் இவையாவும் நீ பழகும் நண்பனைப் பொறுத்தே அமையும். மலருடன் சேர்ந்த நாருக்கும் மதிப்புக் கிடைப்பது போலத்தான் சான்றோருடன் பழகும் அற்பனுக்கும் வாழ்வில் உயர்வு கிடைத்துவிடுகிறது.

—பி. எம்மென்.

(7) எனக்குத் தெரிந்தவரையில் உலகில் இரண்டு சாதிகள்தான் இருக்கின்றன. ஒன்று கடன் கொடுக்கும் சாதி. மற்றொன்று கடன் வாங்கும் சாதி.

—சார்லஸ் லாம்ப்.

(8) நெருப்பு வழியே செல்பவன் புகைக்கு அஞ்சமாட்டான்.

—டென்னிஸன்.

புறநானூற்றுச் சிறு கதைகள்

[நா. பார்த்தசாரதி]

அன்றும் இன்றும்

அன்று பௌர்ணமி. வான வெளியின் நீலப்பரப்பில் முழு நிலா தன் ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. விண்மீன்கள் மினுமினுத்துக்கொண்டிருந்தன. அழகான பெண்ணின் சிவந்த மேனியில் சந்தனக் குழம்பு பூசினால் தெரியும் மங்கலான காந்தியைப் போல நிலா ஒளியில் மலைச் சிகரங்கள் தென்பட்டன.

கண்ணைக் கவரும் நீல நிறத் தண்ணீர் தேங்கி நிற்கும் ஒரு பெரிய சுனை. அந்தச் சுனையின் கரையில் கப்பும் கவருமாக ஓங்கி வளர்ந்திருந்தது ஒரு மூங்கிற் புதர். அந்தப் புதருக்கு அருகே அதை ஒட்டி ஒரு சிறு குடிசை தோன்றுகிறது. அங்கே குடிசை வாயிலில் இரண்டு இளம் பெண்கள் அமர்ந்திருக்கிறார்கள். உள்ளே யாரோ வயதான ஆடவர் ஒருவர் தூங்குவது போலத் தெரிகிறது.

அமர்ந்திருந்த பெண்களின் முகத்தில் அழகு இருந்தது. ஆனால் இளமை குறுகுறுப்பு இல்லை. மணியில் மாசு படிந்தாற்போல சோகம் அந்த இளம் நெற்றிகளில் படிந்திருந்தது. கண்களின் ஓரங்களில் ஈரம் கசிந்திருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை.

அவர்கள் வானப் பரப்பில் நீந்திவரும் நிலாவையும் அதன் கீழே எழில் மிகுந்து தோன்றும் மண்ணுலகத்து மலைச் சிகரங்களையும் இலட்சியமின்றி வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இரவு நேரம். மனித சஞ்சாரமில்லாத கானகம். துணையாக வந்திருந்த பெரியவரும் ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்! பாவம், இந்த அப்பாவிப் பெண்கள்மட்டும் ஏன் இப்படி உறக்கம் வராமல் விழித்துக் கிடக்கின்றார்கள்? வானத்துச் சந்திரனிலும் வையகத்து மலைச் சிகரங்களிலும் இவர்களுடைய அழகிய விழிகள் எவற்றைத் தேடுகின்றன? முகங்களிலே சோகமும் விழிகளிலே கண்ணீர்த் தடமுமாக இவர்கள் நடிக்கும் சோக நாடகம் என்னவாக இருக்கும்? ஒன்றும் விளங்காத புதிராக அல்லவா இருக்கின்றது?

அரசகுமாரிகளைப் போன்ற கம்பீரமான அழகுடைய இவர்கள் இரவு நேரத்தில் இந்தக் காட்டில் நடுக்கும் குளிரையும் பொறுத்துக்கொண்டு ஒரு குடிசை வாசலில் உறக்கமின்றி வீற்றிருக்கவேண்டிய அவசியம்?

நல்ல வேளை! நம்முடைய சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும் சந்தர்ப்பம் இதோ நெருங்கி

விட்டது. நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு அந்தப் பெண்கள் தங்களுக்குள் ஏதோ உரையாடத் தொடங்குகின்றனர். அதைக் கூர்ந்து கவனிப்போம்.

"சங்கவை!"

"என்ன அக்கா?"

"கபிலர் நன்றாக உறங்கிவிட்டாற் போல் இருக்கிறதடி!"

"பாவம்! வயதான காலத்தில் நம்மைக் காப்பதற்காக இப்படி அலைகிறார்.........நடந்து வந்த களைப்பு. நன்றாகத் தூங்கிவிட்டார் அக்கா!"

"அதோ தொலைவில் நிலா ஒளியின் கீழ் என்ன தெரிகிறது பார்த்தாயா?"

"ஆம் அக்கா! பறம்பு மலை அழகு மிகுந்து தோன்றுகிறது!"

"சங்கவை! நிலாவையும் அதன் கீழ் ஒரு காலத்தில் நமக்குச் சொந்தமாயிருந்த அந்த அழகிய மலையையும் பார்க்கும் போது உன் உள்ளம் உருகவில்லையாடி?"

"ஒரு காலம் என்ன அக்கா? போன பௌர்ணமியின்போது கூட உரிமையோடு அந்த மலையில் வாழ்ந்தோம். நம்முடைய தந்தை உயிரோடு இருந்தார்"... சங்கவைக்கு அழுகை வந்துவிடுகிறது. கண்கள் மள மளவென்று நீரைச் சொரிகின்றன. அவள் துயரம் தாங்க முடியாமல் அழுதுவிடுகிறாள்.

மூத்தவளுக்கு மட்டும் மனம் கல்லா என்ன? அவள் வாய் விட்டு அழவில்லை. தலை குனிந்து கண்ணீர் சிந்தினாள்.

"சங்கவை! அழாதே அம்மா. மனித எண்ணங்களின்படி விதியின் எண்ணங்கள் இருப்பதில்லை" — அங்கவையின் குரல் தழுதழுத்தது.

"அந்த விதியும் அதன் எண்ணங்களும் பாழாய்ப் போக! போன பௌர்ணமியன்று அதோ தொலைவில் அற்புதமான அழகுடன் தெரியும் பறம்பு மலை நம்முடையதாக இருந்தது. நம்முடைய அன்புத் தந்தையும் உயிரோடு இருந்தார். இதோ இன்று இந்த பௌர்ணமிக்குள் விதி நம்முடைய வாழ்வை எவ்வளவு பயங்கரமாக மாற்றிவிட்டது அக்கா!......மூவேந்தர்கள் வஞ்சனையால் நம்முடைய பறம்பு மலையைக் கைப்பற்றிக்கொண்டார்கள். நம்முடைய தந்தையையும் கொன்றுவிட்டார்கள். ஒரு திங்களுக்குள் எவ்வளவு குரூரமான மாறுபாடுகள்? இந்த விதிக்குக் கண் என்பதே இல்லையோ அக்கா?"

"இருக்கிறதோ இல்லையோ, கண் பெற்றவர்களை எல்லாம் குருடர்களாக்கிவிட்டுத் தன் ஆணையை நிலை நாட்டுவதற்குத் தெரிகிறது விதிக்கு! அது போதாதா?"

"நல்ல உலகம்! நல்ல விதி"—

"விதியும் உலகமும் எக்கேடு கெட்டு வேண்டுமானாலும் போகட்டும்! நீ உறங்குவதற்கு வா. உள்ளே போய்ப் படுத்துக் கொள்ளலாம். கபிலர் விழித்துக் கொண்டுவிட்டால், 'ஏன் உறங்கவில்லை?'; என்று கடிந்துகொள்வார்."

"உறங்கத்தானே பிறந்திருக்கிறோம்! தந்தையை நிரந்தரமாக உறங்க வைத்துவிட்டோம். வளமான வாழ்வை அளித்துவந்த பறம்பு மலையை மூவேந்தர்கள் கையில் உறங்கக் கொடுத்துவிட்டோம்."

"சொல்லியும் வருந்தியும் பயன் என்ன சங்கவை? நாமும் வாழ்கிறோம் நடைப் பிணங்களாக" — பெண்கள் இருவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு உறங்கச் சென்றனர். விரைவில் தூக்கம் ஆட்கொண்டுவிட்டது.

இப்போது, உறங்கிவிட்டதாக அவர்கள் எண்ணிக்கொண்டிருந்த கபிலர் மெல்ல எழுந்தார். குடிசைக்கு வெளியே வந்தார்.

நிலா ஒளியில் அவர் தலை வைத்துப் படுத்த இடம் கண்ணீர்ப் பிரவாகத்தின் ஈரத்தால் நனைந்திருப்பது தெரிந்தது.

முழு நிலாவையும், அதன் கீழ் தெரிந்த வளமான பறம்பு மலையையும் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே நின்றார். கண்களில் நீர் மல்கித் திரண்டு பார்வையை மறைத்தபோதுதான் அவருடைய நோக்குத் தடைப்பட்டது.

"போன பௌர்ணமியில் என் உயிரினுமினிய அரசன் பாரி ஆண்ட மலை அதோ தெரிகிறது! இப்போது அந்த மலை பாரிக்குச் சொந்தமில்லை. அதை சொந்தம் கொண்டாடுவதற்குப் பாரியும் இந்த உலகத்தில் உயிரோடில்லை. நான் மட்டும் உயிரைச் சுமந்து வாழ்கிறேன். இதோ உறங்குகின்ற பாரியின் மக்கள் அங்கவை, சங்கவை இருவரையும் காத்து ஓர் ஆண் மகன் கையில் ஒப்படைக்கும் பொறுப்பை எண்ணி வாழ்கிறேன்."

கபிலருக்கு இந்தச் சோக சிந்தனைக்குப் பிறகு உறக்கமே வரவில்லை. அப்படியே முழு நிலாவையும், அதன் கீழ் தெரியும் பறம்பு மலையையும் பார்த்தவாறே குடிசை வாயிலில் உட்கார்ந்துவிட்டார். சற்று முன் அங்கவைக்கும் சங்கவைக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணை அவருடைய நினைவில் மிதந்தது. அவருடைய நினைவும் அந்தச் சோகத்தில் மிதந்துகொண்டிருந்தது.

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர்கொளார்.
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்

குன்றும் கொண்டார்யாம்
எந்தையும் இலமே
(புறநானூறு 112)

(அற்றைத் திங்கள் = அந்தப் பௌர்ணமி, குன்று = பரம்பு மலை, இற்றைத் திங்கள் = இந்தப் பௌர்ணமி, எறிமுரசு = அடிக்கத்தக்க முரசு, வேந்தர் = மூவேந்தர், எந்தை = பாரி.)

இரண்டு பகைகள்

அதியமானுக்கு ஒரு புதல்வன் இருந்தான். வாலிபப் பருவத்தினனாகிய அப்புதல்வனுக்குப் பொகுட்டெழினி என்று பெயர். நல்ல வளர்ச்சியும் உடற்கட்டும் பார்த்தவர்களை உடனே கவரும் அழகான தோற்றமும் அவனுக்குப் பொருந்தியிருந்தன.

அந்தத் தோற்றத்தை 'வெறும் அழகான தோற்றம், என்று மட்டும் சொல்லிவிட முடியாது. அப்படிச் சொன்னால் சொல்லியவர்களுக்கே திருப்தி ஏற்படாது. கொஞ்சம் வருணிக்கலாமே என்றுதான் தோன்றும்.

"பரந்து விரிந்த மார்பு; நீண்ட பெரிய கைகள். உருண்டு திரண்டு பருத்த புயங்கள். எடுப்பான கழுத்து. அதன்மேல் கம்பீரமான முகத்தோற்றம். நீண்டு வடிந்த நாசி. மலர்ந்த விழிகள். பரந்த நெற்றி. புன்னகை நிலவும் உதடுகள். காதோரத்தில் சுருண்டு சுருண்டு படியும் சுருட்டை மயிர்."

பார்த்தவர்களை அப்படியே ஒரு சில விநாடிகள் தடுத்து நிறுத்தித் தம்மை மறக்கச் செய்கின்ற மோகனச் சக்தி பொகுட்டெழினியின் அழகுக்கு இருந்தது.

அவன் வெறும் அழகன் மட்டும் இல்லை. தலைசிறந்த வீரனும் கூட. சில போர்களுக்கு தான் ஒருவனாகவே படைத் தலைமை தாங்கிச் சென்று அமோகமான வெற்றிகளை அடைந்திருக்கிறான்.

"புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமா? தந்தையைப் போலவே இவனும் வீரத்தையே குலதனமாகப் பெற்றிருக்கிறான். ஆனால் வீரத்தை விடச் சிறந்த வேறோர் சக்தியும் இவனிடம் இருக்கிறது. இவனுடைய மலர்ந்த முகமும், சிரிக்கும் உதடுகளும், எடுப்பான அழகுத்தோற்றமும் பகைவர்களைக்கூட வசீகரித்துவிடுமே! வில்லும் அம்பும் எடுத்து, வாளும் கேடயமும் தாங்கி இவன் போர் செய்யக் கூட வேண்டாம். எதிரிக்கு முன்னால் போய் நின்று ஒரு புன்முறுவல் செய்தால் போதுமே! தான் எதற்காக வந்திருக்கிறோம் —என்பதையும் மறந்து புன்சிரிப்போடு இவனைக் கட்டிக்கொண்டு விடுவான் இவனுடைய எதிரி. கந்தர்வர்களுக்கு உரிய தேவலோகத்து அழகு!" என்று அரசவையைச் சேர்ந்த பெரியோர்கள் அவனைப்பற்றி அடிக்கடி வியந்து பேசிக்கொள்வது வழக்கம்.

இன்னும் ஒரு வேடிக்கை! எப்போதாவது சில சந்தர்ப்பங்களில் பொகுட்டெழினி தன்னுடைய தேரில் ஏறித் தகடூர் வீதிகளின் வழியே செலுத்திக் கொண்டு போவான். அப்படிப் போகும்போது வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீடுகளின் சாளரங்களிலும் ஒருக்கொளித்த கதவின் இடை வெளிகளிலும், சில ஆச்சரியங்கள் நிகழும்!

சாளரங்களிலும் கதவின் இடை வெளிகளிலும் திடீர் திடீரென்று தாமரை மலர்கள் மலரும்! முழுமதிகள் உதயமாகும்! —என்ன இது? சுத்தப் பிதற்றலாக இருக்கிறதே? தாமரைப் பூவும், சந்திரனும், வீட்டு வாசலிலும் பலகணியிலும் மலர்கிறதாவது? என்று ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

ஆம்! தாமரை மலரைப் போலவும், முழு மதியைப் போலவும் முகங்களை உடைய கன்னிப் பெண்கள் பலர் பொகுட்டெழினியைக் காண்பதற்காகத் தங்களுக்குள்ளே போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். அவன் அழகைப் பார்க்க அவ்வளவு ஆர்வம், அதை வெறும் ஆர்வமென்றுகூடச் சொல்வதற்கு இல்லை. 'ஆர்வ வெறி' என்றே சொல்லலாம்.

காதற் கடவுளாகிய மன்மதனே தேரில் ஏறி வீதியில் செல்வதாகத் தோன்றும் அவர்களுக்கு. ஒரே நாளில், ஒரே சமயத்தில், ஒரே பார்வையில் கண்டு, கண்களையும் மனத்தையும் திருப்திப்படுத்திக்கொண்டுவிடக்கூடிய அழகு அல்ல அது. அவன் தேரேறி வீதியில் போகின்ற போதெல்லாம் வீதியில் அவனைப் பார்த்தாலும் அவன் புதிய அழகனாகவே தெரிகிறான். இரஸத் தேர்ச்சியும் காவிய ஞானமும் உள்ள மகாகவி ஒருவன் சிருஷ்டித்த காவியம் எத்தனை தடவை படித்தாலும் புதிய அழகும் புதிய நயமும் உடையதாகவே தோன்றுகிறது பாருங்கள்!

பொகுட்டெழினியின் இளமை அழகும் அவ்வூர்க் கன்னிப் பெண்களுக்கு இப்படி ஒரு காவியமாகத்தான் இருந்தது. எனவே அழகைக் காண்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வம் குன்றவில்லை.

தெருவில் அவன் செல்லுகிற போதுகளிலே வழக்கமாக நடக்கும் இந்த மறைமுகமான 'தரிசன நாடக'த்தை ஔவையார் ஒருநாள் பார்த்துவிட்டார். 'பொகுட்டெழினியின் அழகு இளம் பெண்களை என்ன பாடு படுத்துகிறது?' என்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. 'தன் ஆருயிர் நண்பனாகிய அதியமானின் புதல்வன்தான் இந்த அழகன்'—என்ற எண்ணத்தினால் அவருக்குப் பெருமிதம் ஏற்பட்டாலும், மற்றோர் பக்கம் இது பெரிய ஆச்சரியமாகவே தோன்றியது.

"மனித நியதிக்கு மேற்பட்ட அழகு ஆணுக்கோ பெண்ணுக்கோ இருந்தால் அவற்றின் விளைவு மிக விரஸமாக இருக்கும்"—என்பதை அறிந்தவர் அறிந்தவர் அவர்.

பொகுட்டெழினிக்கு விரைவில் திருமணம் செய்யுமாறு அதியமானிடம் சொல்லிவிட வேண்டுமென்று எண்ணினார் அவர். எழினி நிகரில்லாத அழகன் மட்டுமில்லை, பகைவர்கள் தன் பெயரை எண்ணிய மாத்திரத்திலேயே அஞ்சி நடுக்கம் கொள்ளும்படியான நிகரற்ற வீரனும் ஆவான் என்பதை ஔவையார் நன்கு அறிவாராகையினால் அவனைப்பற்றி அதியமானிடம் கூறும்போது சாமர்த்தியமாகக் கூறவேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த அன்றைக்கு மாலையிலேயே ஔவையார் அதியமானைச் சந்திக்க நேர்ந்தது. அவனைக் கண்டதுமே தலைகால் இல்லாமல் மொட்டையாக ஆரம்பித்தார் தம்முடைய பேச்சை!

"அதியா! உன்னிடம் ஒன்று கூறப்போகிறேன், கேட்டால் நீ திடுக்கிட்டுப் போகமாட்டாயே?"

"அது என்ன தாயே, அப்படி நீங்கள் கூறப்போகும் திடுக்கிட வைக்கும் செய்தி?"

"உன் மகன் பொகுட்டெழினிக்கு இந்த உலகத்தில் இரண்டு பெரிய பகைகள் உண்டாயிருக்கின்றன!"

"என்ன பகைகளா?...... யாருக்கு?...என் மகனுக்கா? புதிராக அல்லவா இருக்கிறது!"

அதியமான் உண்மையிலேயே இந்தச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய்விட்டான்.

"உண்மையாகத்தான் சொல்கின்றேன் அப்பா! உன் மகனுக்கு இரண்டு பகைகள் உண்டாகிவிட்டன."

"தாயே! சொல்வதைத் தெளிவாகச் சொல்லுங்கள், என் மனம் பதறுகிறது."

"கேள், அதியா! முதல் பகைவர்கள் இந்த ஊரில் இந்த வீதிகளிலுள்ள கன்னிப் பெண்கள். இரண்டாவது பகைவர்கள், எழினி படையெடுத்துச் சென்று வெற்றி கொண்ட பகைவர்களின் ஊர் மக்கள்."

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்"?

"ஒன்றும் உனக்குப் புரியாததாக நான் சொல்லவில்லை! இந்த ஊர்க் கன்னிப் பெண்களும், தோற்றுப் போன ஊர் மக்களும் எழினிக்குப் பகைவர்களாகிவிட்டார்கள் என்கிறேன்."

"கன்னிப் பெண்களுக்கும் இவனுக்குமா பகை? அது எதனால்?"

"அப்படிக் கேள் அதியா, சொல்கிறேன். மலர்ந்த பூக்

களால் தொடுக்கப்பட்ட தும்பை மாலையை அழகிய தன் மார்பில் அணிந்துகொண்டு வீதி வழியே தேரேறிச் செல்கிறான் உன் மகன். அவனுடைய பருத்த நீண்ட புயங்களையும் மார்பையும் முகத்தையும் கன்னிப் பெண்கள் சாளரங்களிலும், கதவிடுக்குகளிலும் நின்று பார்க்கிறார்கள். அவன் அழகைக் கண்டு ஏங்கிக் கண்கள் பசந்து தோள்கள் மெலிய வாடி வருந்துகிறார்கள். ஏக்கம் நிறைந்த அவர்கள் நெஞ்சம் ஒரு பகை!"

அதியமான் சிரித்துவிட்டான். சிரிப்பை அவனால் அடக்க முடியவில்லை.

"தாயே! என்ன இது? வேடிக்கையாக..."

"வேடிக்கைதான்! பொறுமையாக இன்னும் கேள்."

"சொல்லுங்கள்! இன்னொரு பகை..."

"உன் மகன் எழினி படையெடுத்துச் சென்று தோல்விப்பட்டு அழிவுறச் செய்த ஊர்களில் ஆரவாரம் ஒடுங்கித் திருவிழாக்களெல்லாம் நின்று போகின்றன. எழினி படைகள், ஆட்டிறைச்சி முதலிய உணவுப்பொருள்களை உண்டு வெற்றியைக் கொண்டாடுகின்றன! அந்த ஊரிலுள்ள குளங்களிலும் நீர்நிலைகளிலும் எழினியின் மத நீர் சொரியும் யானைப் படைகள் தண்ணீர் குடிக்கச் சென்று நீரைக் கலக்கிச் சேறாக்கிவிடுகின்றன. நீர், மத நீரும் சேறும் கலந்து தூய்மை இழந்துபோகிறது. இதனால் அந்தத் தோற்றவூரின் மக்கள் அங்கு வாழ்வதற்கு அஞ்சி எழினியை வெறுக்கிறார்கள். இந்த வெறுப்பு அவனுக்கு ஏற்பட்ட இரண்டாவது பகை!"

"தாயே! என் மகனின் அழகையும் வீரத்தையும் எவ்வளவு சாமர்த்தியத்தோடு ஒரே இணைப்பாக இணைத்துவிட்டீர்கள்?"

அவன் குரலில் ஆச்சரியமும் நன்றியும் தொனித்தன.

"பாராட்டவில்லை அப்பா! இந்தப் பகைகள் இரண்டையும் தீர்ப்பதற்கு நீ முயலவேண்டாமா?"

"எப்படித் தீர்க்க முயலலாம்? நீங்கள்தான் ஏதாவது வழி சொல்லி அருளவேண்டும்."

"நானே சொல்லட்டுமா?"

"நீங்கள்தான் சொல்லவேண்டும்—சொல்லத் தகுதி உடையவர். வேறு யாரால் சொல்ல முடியும்?"

"முதல் பகை உள்ளூர்க் கன்னிப் பெண்களின் பகை! அதைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது அவ்வளவு கஷ்டமானதும் இல்லை."

"என்ன வழி தாயே?"

"சீக்கிரம் உன் மகனுக்கு ஒரு திருமணம் செய்துவிடு! 'பயிர்' வேலிக்குள் அடங்கி

விடும். பாதுகாப்பையும் பெற்று விடும்."

"நல்லது! இரண்டாவது பகை...?"

"உனக்குப் பின் உன் மகன் முடி சூடும்போது அது தீர்ந்து போகும்! அரசாட்சியில் மக்களின் துன்பங்களை உணர அனுபவமேற்படும். அப்போது தன்னால் தோற்கடிக்கப்பட்ட வீரானாலும் மக்களுக்கு வருத்தம் நேராது பாதுகாக்கும் கருணையும் தோன்றிவிடும்."

"நன்றாகச் சொன்னீர்கள்! வேடிக்கையாகவே இரண்டு பெரும் பிரச்னைகளையும் தீர்த்து விட்டீர்களே? சீக்கிரமே இவ்விரு பகைகளையும் தீர்த்துவிடுகிறேன்."

அதியமான் சம்மதித்தான். ஔவையார் மகிழ்ந்தார்.

"அலர்பூந் தும்பை அம்பகட்டு
மார்பின்
திரண்டுநீடு தடக்கை என்னை
இளையோற்கு
இரண்டெழுந் தனவாற்
பகையே ஒன்றே
பூப்போல் உண்கண் பசந்து
தோள் நுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்
தன்று ஒன்றே
விழவின்று ஆயினும் படுபதம்
பிழையாது
மையூன் மொசித்த ஒக்க
லொடு துறைநீர்க்
கைமான் கொள்ளுமோவென
உறையுள் முனியும் அவன்
செல்லும் ஊரே"

(புறநானூறு 96)

பட்டு—அழகிய, என்னை—என் தலைவனாகிய அதியமானின், இளையோன்—மகன், உண்கண்—மையுண்ட கண், நுணுகி—மெலிந்து, பிணித்தன்று—ஆசையாற் கட்டுப்படுத்தியது, பதம்—சமைக்கும் உணவு, மையூன்—ஆட்டிறைச்சி, மொசித்த—உண்ட, ஒக்கல்—சுற்றம், கைமான்—யானை, முனியும் வெக்கும்.

—"சுதேசமித்திரன்"

அறிவுக் கதிர்

கல்வி மனத்தைப் பண்படுத்துவது போன்று, உழைப்பு தேகத்தைப் பண்படுத்தும்.

வருந்தி உழைத்து வசப்படுத்தும் அறிவு உடைமையாகும்.

ஒவ்வொருவனுக்கும் இருவிதக் கல்விப் பயிற்சி உண்டு. ஒன்று பிறர் கற்பிக்கத் தான் கற்றுக்கொள்வது. அதனிலும் முக்கியமான மற்றொன்று தனக்குத்தானே கற்பிப்பது.

வாழ்வு மலர்ந்தது

["சாருகன்"]

பெருமூச்சு விட்டுக்கொண்டே புகை வண்டி பாலூரை விட்டுக் கிளம்பியது. சுந்தரம் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அமர்ந்து வெளியிலுள்ள காட்சிகளை ஜன்னலின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் பல எண்ண அலைகள் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு ஓடின. இரவு நேரமாகையால் காற்று சில்லென்று வீசியது. இருபுறமும் உள்ள குன்றுகள் பால்போன்ற நிலவு வெளிச்சத்தில் கருமையாகத் தோன்றின. அதையடுத்து நல்ல செழிப்புள்ள தோட்டங்கள் நிறைந்த சமவெளிப் பிரதேசத்தைப் புகைவண்டி கடந்து சென்று கொண்டிருந்தது. காடுமுரடான அம்மலைகளைப் போலல்லாமல் அத்தோட்டங்கள் பார்ப்பதற்கு ரம்மியமாகத் தோன்றின.

வாழ்க்கையிலும் அது போலவே மனிதன் பல காடுமுரடான பாதைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. இதை எண்ணியதும் சுந்தரத்தின் முகத்தில் பல சிந்தனை ரேகைகள் பளிச்சிட்டன. அவனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த பெரியவர் "தம்பி, வெளியே தலையை நீட்டாதே. கண்ணில் கரித்தூள் விழும்" என்று கூறிவிட்டுக் காலை நீட்டிப் படுத்துக்கொண்டார். சுந்தரம் அதை லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. பின்னோக்கிச் செல்லும் மரங்களுடனும் குன்றுகளுடனும் அவனது சிந்தனைச் சுழலும் சென்றது.

சதாசிவம் பிள்ளை பாலூரிலேயே பெரிய மிராசுதார். அவ்வூரில் அவருக்கு ஏராளமான நிலங்களும் இரண்டு வீடுகளும் இருந்தன. அவ்வூரின் நடுவில் தனக்கென்று தனியாக ஒரு அழகான பங்களா கட்டிக்கொண்டிருந்தார். பங்களாவைச் சுற்றித் தென்னை மரங்களும் பின்னால் ஒரு பூந்தோட்டமும் இருந்தன. சுந்தரம் அவருடைய ஒரே மகன். தன்னுடைய மூன்றாவது வயதிலேயே தாயை இழந்துவிட்டான். அதனால் சிறு வயதிலிருந்தே செல்லமாக வளர்ந்து வந்தான். அவனுக்காகவே சதாசிவம் பிள்ளை இரண்டாவது மணம் செய்து கொள்ளாமலிருந்தார்.

சதாசிவம் பிள்ளையிடம் அருணாசலம் என்பவர் கணக்கப் பிள்ளையாக இருந்தார். அவருடைய மகளான சரஸாவும் சுந்

தாமும் சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் பழகினார்கள். அருணாசலத்தின் வீடும் பங்களாவின் பக்கத்திலேயே இருந்ததால் அவர்களது நட்பு வளர்ந்து கொண்டே சென்றது. சதாசிவம் பிள்ளையும் சிறு குழந்தைகள் பழகுவதில் தவறொன்றுமில்லையென்று நினைத்ததால் தடையெதுவும் விதிக்கவில்லை.

சரஸா அவனைவிட இரண்டு வயது சிறியவள். அடிக்கடி அவள் அவனிடம் பாடம் சொல்லிக்கொள்ள வருவாள். அப்பொழுதெல்லாம் சுந்தரம் அவளை அடித்தும் கிள்ளியும் அவற்றைச் சொல்லிக் கொடுப்பான். ஆனால், சரஸா அத்துன்பங்களையெல்லாம் அவன் மீதுள்ள அன்பினால் பொறுத்துக்கொள்வாள். அவள் அவன் மீது உயிரையே வைத்திருந்தாள். பருவம் அவ்வன்பைக் காதலாக்கியது.

சுந்தரம் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவுடன் அவனுடைய தந்தை அவனைக் கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னை அனுப்பத் தீர்மானித்தார். அதனால் சுந்தரமும் சரஸாவும் பிரிய வேண்டியதாயிற்று. சுந்தரமும் புறப்படும்பொழுது சரஸா துக்கம் தாங்காமல் அழுதே விட்டாள். சுந்தரம் படிப்பு முடிந்தவுடன் வந்து விடுவதாகக் கூறி அவளைத் தேற்றிவிட்டுப் புறப்பட்டான். ஸ்டேஷனை அடையும் வரை அவளது கண்ணீர் நிறைந்த முகம் அவனெதிரிலேயே இருந்தது.

கல்லூரியில் சேர்ந்த முதலிரண்டாண்டுகள் வரை சரஸாவின் நினைவு சுந்தரத்தின் மனத்திலிருந்தது. நாளாக ஆக அந்த நினைவு சிறிது சிறிதாகத் தேய்ந்து கடைசியில் மறைந்தே விட்டது. அப்போதுதான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

அன்று கல்லூரிக்கு நேரமாகி விட்டபடியால் சுந்தரம் டாக்ஸியில் சென்று கொண்டிருந்தான். ஒரு பஸ் நிலயத்தைக் கடக்கும் போது ஒரு பெண் அவனைப் பெயர் சொல்லிக்கூப்பிட்டாள். சுந்தரம் காரை நிறுத்தச் சொல்லித் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் வேகமாக அவனிடம் வந்து "மிஸ்டர்! கல்லூரிக்கு நேரமாகிவிட்டது. பஸ் இன்னும் வரவில்லை. எனக்கு இன்று பரீட்சை இருக்கிறது. ஆகையால், தயவு செய்து இந்தக் காரில் அழைத்துப் போகிறீர்களா?" என்றாள். சுந்தரத்திற்கு ஆச்சர்யமாக இருந்தது. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அவளையும் ஏற்றிக் கொண்டான்.

அவள் அவனுடன் அவனுடைய வகுப்பிலேயே படிப்பவள். அவளுடைய பெயர் சுகுணா. சுந்தரம் அவளை வகுப்பில் எத்தனையோ முறை பார்த்திருக்கிறானென்றாலும் அன்றையச் சந்திப்பு அவனுடைய மனத்தில்

ஒரு இன்பத்தை யூட்டியது. பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்த அவளைத் திரும்பிப்பார்த்தான். அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவர் கண்களும் சந்தித்து ஒருவர் மனத்துள் ஒருவரைப் புகவைத்தன.

அதன் பின் பலமுறை அவர்களுடைய சந்திப்பு நிகழ்ந்தது. சுந்தரம் தனி வீட்டிலிருந்ததால் சுகுணா அவனுடைய வீட்டிற்கு வந்து போவது வழக்கமாகிவிட்டது. இதற்கிடையில் சுந்தரத்தின் தந்தை அவனுடைய திருமண விஷயமாக இரண்டு மூன்று கடிதங்களெழுதினார். அவற்றிற்கெல்லாம் படிப்பு முடிந்ததும் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒரே வாக்கியத்தில் சுந்தரம் எழுதி விட்டான். ஒரு நாள் சுந்தரம் தன் வீட்டில் சுகுணாவுடன் பேசிக்கொண்டிருக்கும் போது தபால்காரன் ஒரு கவரைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அதன் மேலிருந்த எழுத்துக்களைப் பார்த்தவுடனேயே சுந்தரத்தின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவ்வெழுத்துக்கள் மறைந்துபோன சரஸாவின் நினைவை அவனது மனதிலெழுப்பின. அவசர அவசரமாக சுந்தரம் அதைப் பிரித்தான்.

அக் கடிதத்தில் சரஸா தனது அன்பையெல்லாம் கொட்டியெழுதியிருந்தாள். தன் மனத்துயரனைத்தும் அக் கடிதத்தின் மூலம் வெளிப்படச் செய்திருந்தாள். 'தனக்கு மணம் செய்யப் பெற்றோர் தீர்மானிப்பதாகவும், ஆனால், அவனில்லாமல் அவளால் வாழ முடியாது' எனவும் குறிப்பிட்டிருந்தாள். ஆங்காங்கே அக் கடிதத்தில் சிந்தியிருந்த நீர்த்துளிகள் அவளது கண்ணீர்நிறைந்த முகத்தை அவனெதிரே கொண்டு வந்து நிறுத்தின. அம்முகம் அவனுக்கு எதிரே நின்று "எனக்கு வாழ்வளிக்க மாட்டாயா?" என்று கெஞ்சுவதுபோல இருந்தது. அவனது கண்களில் நீர் நிறைந்தது.

அது வரை ஒன்றும் புரியாமல் அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுகுணா அவனது கண்களில் நீரைக் கண்டதும் திடுக்கிட்டாள், உடனே "அது என்ன கடிதம்? ஏதாவது துக்ககரமான செய்தியா? என்று கேட்டாள். சுந்தரம் கண்களைத் துடைத்துக் கொண்டே கடிதத்தை அவளிடம் நீட்டினான். அதைப் படித்து முடித்த சுகுணாவின் உள்ளத்தில் ஒரு பக்கம் சரஸாவின் மீது பரிவும் மறு பக்கம் சுந்தரத்தின்மீது கோபமும் எழுந்தது. உடனே அவனை விட்டு ஓடி பின்னால் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். "சுந்தர், நீங்கள் இவ்வளவு தூரம் கல் நெஞ்சாய் இருப்பீர்கள் என்று நான் நினைக்கவேயில்லை. உங்கள் மீது உயிரையே வைத்திருக்கும் ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழாக்க எப்படித்தான்

உங்களுக்கு மனந்துணிந்ததோ? போயும் போயும் நான் உங்கள்மீது காதல் கொண்டேனே. நாளை என்னையும் நீங்கள் மோசம் செய்யமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? ஒரு அபலையின் வாழ்வு பாழாவதை நான் ஒரு போதும் விரும்பமாட்டேன். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதுபோல் பெண்ணுள்ளத்தைப் பெண்ணாகிய நான் அறிவேனே தவிர, கல்நெஞ்சராகிய உங்களால் அறிய முடியுமா?" என்று படபடவென்று கொட்டித் தீர்த்தாள்.

அதுவரை பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரம் "என்னை மன்னித்துவிடு சுகுணா. நான் திருந்திவிட்டேன், நாளைக்கே ஊருக்கு லெட்டர் எழுதிவிடுகிறேன். இந்தக் கடிதமும் உனது சொற்களுமே எனது கண்களைத் திறந்துவிட்டன" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான்.

மறு நாளே தந்தைக்கு ஒரு கடிதமும் சாலாவிற்கு ஒரு கடிதமும் சுந்தரம் எழுதினான். தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் கல்லூரிப் படிப்பு முடிவதாகவும், படிப்பு முடிந்ததும் திருமணம் செய்துகொள்வதாகவும், அப்படிச் செய்துகொண்டாலும் சாலாவைத் தவிர வேறு ஒருவரையும் மணக்கப்போவதில்லையென்றும் எழுதியிருந்தான்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அன்றே சுந்தரம் தனது ஊருக்குப் புறப்பட்டான். வழியிலெல்லாம் பற்பல இன்ப நினைவுகளைக் கற்பனை செய்து பார்த்தான். வீட்டை நெருங்க நெருங்க அவனுடைய ஆவல் அதிகமாகியது. வீட்டை நெருங்கியதும் சுந்தரம் திடுக்கிட்டான். வீடே பொலிவிழந்து காணப்பட்டது போல் தோன்றியது. எங்கும் ஒரே தனிமை நிறைந்து காணப்பட்டது. சாலா பக்கத்து வீட்டு வாயிலில் நின்று அவனை வரவேற்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக அவ் வீடே பூட்டப்பட்டுக் கிடந்தது. அவர்கள் ஊரை விட்டுப் போய்விட்டதாக அவனுடைய தந்தை சொன்னார்.

இதைக் கேட்டவுடன் சுந்தரத்திற்குத் தன்னை யாரோ அதல பாதாளத்தில் கொண்டு தள்ளுவது போலிருந்தது. உலகமே எங்கும் இருண்டு அந்தகாரம் சூழ்ந்தது போன்ற பிரமை ஏற்பட்டது. தன் மனக் கோட்டைகள் எல்லாமே தூளாகிவிட்டதை உணர்ந்தான். சாலாவைக் கண்டுபிடிக்காமல் வீட்டுக்குள் நுழைவதில்லை எனப் பைத்தியக்காரனைப் போல் கூறிவிட்டு வெளியே கிளம்பி விட்டான். கிளம்பியவன் சென்னைக்கே திரும்பிப் போவதென்ற முடிவுடன் புகை வண்டியிலேறி அமர்ந்தான்.

வண்டி செங்கற்பட்டை அடைந்தது. பிளாட்பாரத்திலி

ருந்து எழுந்த பற்பல ஒலிகள் அவனது சிந்தனையைத் தடை செய்யவில்லை. திடீரென்று சுந்தரம் என்று கூப்பிட்டுக் கொண்டே அவனுடைய தோளை யாரோ உலுக்கினார்கள். அவனது சிந்தனைத் தொடர் அறுபட்டது. திடுக்கிட்டவனாய்த் திரும்பினான். தனக்குப் பின்னால் அருணாசலம் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட அவனது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. "நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? சாலா எங்கே?" என்ற கேள்விகள் ஆவலுடன் அவனுடைய வாயினின்றும் எழுந்தன. "எல்லாவற்றையும் சொல்லுகிறேன்" என்று கூறிக்கொண்டே அருணாசலம் எதிரிலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தார். சுந்தரம் ஆவலுடன் அவரது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அருணாசலம் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்ல ஆரம்பித்தார்.

"நீ கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னை சென்றதிலிருந்து உன்னிடமிருந்து கடிதமெதுவும் வரவில்லை. சாலா சரியாகச் சாப்பாடு கூடச் சாப்பிடுவதில்லை. சதா உன்னையே நினைத்து ஏங்கினாள். நாங்களெல்லோரும் நீ அவளைக் கைவிட்டுவிட்டாயென்றே நம்பிவிட்டோம். அதனால் அவளுக்கு வேறு மணம் செய்யத் தீர்மானித்தோம். அதற்கு அவள் இணங்கவேயில்லை. வாழ் நாள் முழுதும் கன்னியாகவே கழித்து விடுவதாகக் கூறி என்னைக் கெஞ்சினாள். பிறகு தான் அவள் உனக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதற்கு நீ எப்படியாவது அவளையே மணம் செய்துகொள்வதாக எழுதியிருந்தாய். அந்தக் கடிதமே அவளுக்கு ஆறுதல் சொல்லியது. எங்களால் முடியாதவற்றை அந்தக் கடிதம் சாதித்தது. அக் கடிதத்தைக் காணும் போதெல்லாம் உன்னையே நேரில் காண்பது போல எண்ணி மகிழ்ந்தாள். காதல் இவ்வளவு சக்தியுடையது என்பது கதைகளில்தான் என்று அதுவரை எண்ணியிருந்தேன். வாழ்விலும் அது உண்மை என்பதை அக் கடிதம் நிரூபித்தது. அதனால் நான் மகிழ்ச்சியே அடைந்தேன்."

"ஆனால் அம்மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை. அன்று சாயங்காலமே உன்னுடைய தந்தை என்னைக் கூப்பிட்டனுப்பினார். அவருடைய முகத்தைப் பார்த்த நான் பயந்தே போனேன். என்னைக் கண்டதும் அவர் கோபத்துடன் கண்டவாறு திட்டினார். அவருடைய செல்வத்திற்காக சாலாவின் மூலம் நாங்கள் உன்னை வசியப்படுத்திக் கொண்டோமென்று கூறினார். தனக்குச் சமமான அந்தஸ்துள்ள இடத்திலிருந்து ஒரு பெண்ணை உனக்கு மணம் செய்யத் தீர்மானித்திருந்தாராம். நாங்கள் அவருடைய எண்ணத்தில் மண்ணைத் தூவியதோடன்றி அவரது

குடிப்பெருமைக்கும் குழி பறித்து விட்டதாகக் கூறினர். அவற்றையெல்லாம் இப்போது உன்னிடம் சொல்லிக்கொண்டிருக்க நேரம் போதாது. கடைசியில் 'இந்த சம்பந்தம் நடப்பதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லி எங்களை வீட்டை விட்டே துரத்தி விட்டார்.

"அதன் பிறகு நாங்கள் செங்கற்பட்டில் வந்து தங்கினோம். சரளாவிற்கு வேறு வரன் தேட முயற்சித்தேன். நானும் அவளது அம்மாவும் அவளது மனத்தை மாற்றப் பெரிதும் முயற்சி செய்தோம். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்று நாங்கள் நினைத்தோம். ஒரு நாள் ஒரு வரனைப் பற்றி அவளிடம் கூறும்போது அவள் மௌனமாக இருந்தாள். அவள் சம்மதித்து விட்டாள் என்று நினைத்து அந்த வரனை முடிவு செய்தோம். ஆனால் கல் கரையவில்லை. கருங்கல்லாக மாறியது என்பது பின்னால்தான் தெரியவந்தது. கல்யாணத்திற்கு முதல் நாளிரவு ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ மறைந்து விட்டாள். அன்று முதல் இன்று வரை அவளைத் தேடுகிறேன். அவள் போகும்போது எழுதி வைத்துச் சென்ற கடிதம் இது." என்று கூறிச் சுந்தரத்தின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

அதுவரைக் கல்லாய்ச் சமைந்திருந்த சுந்தரம் சுயநினைவு வரப் பெற்றவனாய் அதைப் பிரித்தான்.

"அன்புள்ள பெற்றோருக்கு,

அநேக வணக்கங்கள். என்னுடைய செய்கை உங்களுக்கு மனத்துயரைக் கொடுக்கலாம். ஆனால் வேறு வழியில்லை. இந்த இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு இந்த ஒரே வழிதான் தோன்றியது. தற்கொலை செய்து கொள்ளலாமா? என்று கூட எண்ணினேன். ஆனால் அது கோழைத்தனம் என்று என்னுடைய உள்ளுணர்ச்சி கூறியது. மேலும் என்றாவது ஒரு நாள் அவரைக் காணமாட்டோமா என்ற நப்பாசை என்னை உயிர்வாழத் தூண்டியது. ஓடிப் போனவள் என்று உலகம் என்னைத் தூற்றும். ஆனால் அதற்காக நான் கவலைப்படப் போவதில்லை. எனக்காக நீங்கள் இவ்வளவு சிரமப் பட்டதற்கு நன்றி. அவரில்லாத வாழ்க்கை எனக்குப் பாலைவனம்தான். நான் அதில் பூஞ்சோலையைக் காணமுடியாது. ஆகையால் தயவு செய்து என்னைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
சரளா.

கடிதத்தைப் படித்து முடித்த சுந்தரத்தின் உள்ளத்தில் சோகம் நிரம்பியது. அருணாசலம் அதற்குள் பக்கத்திலிருந்தவரிடமிருந்து செய்தித்தாளை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். அதில் ஏதோ ஒரு செய்தி அவரது கவனத்தை மிகவும் கவர்ந்தது. அதைப் படித்ததும் அவர் 'ஆ' வென்றலறினார். சுந்தரம் உடனே திடுக்கிட்டுப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தான். அதில் கீழ்வருமாறு ஒரு செய்தி இருந்தது.

"நேற்று மாலை சுமார் 18 வயதுடைய ஒரு பெண் கார் விபத்தில் சிக்கினாள். தலையில் பலத்த காயம், ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். அப்பெண் யாரென்று தெரியவில்லை..........."

இச் செய்தியைப் படித்ததும் சுந்தரத்திற்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. இருவரும் ஆஸ்பத்திரிக்குச் செல்லத் தீர்மானித்தனர்.

ஆஸ்பத்திரியில் அப்பெண்ணைப் பார்த்த சுந்தர் உடனே 'சுகுணா' என்று கத்திவிட்டான். அவள் கண்களை விழித்தாள். அவளது முகத்தில் வியப்புக் குறிகள் தோன்றின. சுந்தரம் அருணாசலத்தினிடம் அவளைப் பற்றிய விவரங்களைக் கூறினான். அந்தச் சமயத்தில் உள்ளே வந்த ஒரு நர்ஸ் அவர்களைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றாள். பிறகு உடனே ஓடிப்போய்ச் சுந்தரத்தின் கால்களைக் கட்டிக் கொண்டு விம்மி அழுதாள். பின் அவர்கள் இருவருமாகச் சுகுணாவின் அருகில் சென்றனர். அக்காட்சியைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அருணாசலத்தின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

சுகுணா ஒரு நொடிக்குள் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு விட்டாள். அவளது முகத்தில் மகிழ்ச்சி நிரம்பியது. "சுந்தர், இந்த இரண்டு நாட்களுக்குள்ளாகவே இவளது மேலான குணம் என்னை வசீகரித்துவிட்டது. இவளைக் கலங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது உன் பொறுப்பு" என்று கூறி நிறுத்தினாள். அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை. கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன. அவளுடைய முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. அதே சமயத்தில் சுந்தரம், சரளா ஆகிய இருவரது வாழ்வும் மலர்ந்தது.

—'சௌபாக்கியம்'

COPY OF DIRECTOR'S PROCEEDINGS RC. 1463-B 7-53

dated 20-7-56.

GOVERNMENT OF MADRAS

Abstract.

Schools – Elementary School-Aided-Payment of compensation for loss of fee income due to grant of fee concessions—Rates of compensation continued in 1956-57.

Health, Education and Local Administration Department. G. O. Ms. No. 1328 Education. Dated the 9th July, 1956. Read the following.

G. O. Ms. No. 1546 Education Dated 14-9-56.

From the Association of Managers of Elementary Schools, Letters dated 3-10-55 and 5-5-56.

From the Director of Public Instruction D. O. 1463 B7-53 dated 1-5-56.

The Govt have carefully considered the repre sentations made by the Association of Managers of Ele. Schools and other similar Associations for revision of the rates of compensation fixed in the Govt. order read above, and they have decided, pending the revision of the Grant-in-aid rules, to continue the existing rates of compensation during the school year 1956-57.

(By order of the Governer)

R. A. GOPALASWAMY

Secretary to Government.

(True Copy)

Withdrawal of recognition of school

D. P. I's ORDER SET ASIDE

At the High Court, Mr Justice P. Rajagopalan allowed an application for the issue of a *writ of certiorari* preferred on behalf of the petitioner, who was a teacher-manager of the Dandapani aided elementary school, Kaniyur, Coimbatore district, represented by Mr. B. Ramaswami Ayyar, and quashed the order of the Director of Public Instruction.

The petitioner claimed that the school was recognised and admitted to aid since its foundation in 1917. On Feb. 16, 1955, he received a communication from the District Educational Officer, Coimbatore to the effect that it was proposed to withdraw recognition and aid to the school from Dec. 1, 1955, as it had not submitted itself for inspection by the officers of the Education Department.

The petitioner submitted his explanation but no further communication was made to him. On May 13, 1955 ten charges were framed against the petitioner by the Deputy Inspector of Schools and the petitioner was called upon to submit his explanation. There was no reference in that letter to any possibility of the recognition or aid being withdrawn from the school. The petitioner denied the charges on May 21, 1955. On July 27, 1955, the District Educational Officer framed 12 charges against the petitioner, and he in an explanation submitted on Aug. 6, 1955. denied the charges.

On Sept. 12, 1955 the District Educational Officer passed an order withdrawing recognition and aid

ஸீம் பிரயாணி திராவிடத்திற்கு வந்தார். மைசூரில் மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த ஒரு குன்றிலே முதன் முதலாகத் தான் கொண்டுவந்த ஏழு காப்பி வித்துக்களை ஊன்றினார். அந்த மலை அவரின் நினைவாக பாபா உத்தின் மலை என்ற பெயர் பெற்றது. இங்கு விளையும் காப்பி தான் **உலகத்திலே சிறந்தது!** அன்று முதல் அது திராவிடத்தின்பல பகுதிகளிலும் பரவத் தொடங்கியது.

1795-ல் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் காப்பியை கர்னல் ரீட் என்பவர் பயிரிட்டார்; 1799-ல் ப்ரௌன்ஸ் என்பவர் மலையாளத்தில் பயிர் செய்தார். 1830-ல் சேலம் சேர்வராயன் மலையில் காக்பர்ன் என்பவரால் காப்பி பயிரிடப்பட்டது.

1840-ல் காப்பி வியாபாரப் பொருளாக மாறியது. அந்த ஆண்டில் காக்பர்னும்,' லாசெல்ஸ் அண்டு கம்பெனியாரும் பல காடுகளை ஆட்சியாளரிடம் இனாமாகப் பெற்றுப் பெருமளவில் காப்பித் தோட்டங்களை அமைத்தனர். காப்பித் தொழில் தென்னாட்டில் வளர்ந்துகொண்டே இருந்தது இவ்வாறு!

இதே சமயத்தில் நமது நாட்டுக் காப்பி, 1799-ல் ஜாவாவுக்குக் கொண்டுபோய் பயிர் செய்யப்பட்டது, ஒரு டச்சுக்காரரால்! அங்கிருந்து அது பல நாடுகளுக்கும் பரவியது.

காப்பி உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிப்பது அமெரிக்காவில் உள்ள பிரெசில் நாடு! அங்கு ஆண்டொன்றுக்கு **10 லட்சம் டன்** விளைகிறதாம். ஆனால் இந்த நாட்டுக்கு விதை கொடுத்த பெருமை நமது திராவிடத்தைச் சேரும். 1750-ல் **ஜே. ஏ. சி. புரோமா** (J. A. C. Bromo) என்பவர் திராவிடத்திலிருந்து காப்பி விதைகளை, பிரேசிலுக்கு எடுத்துச் சென்றார். பின்புதான் அங்கு காப்பி விளைந்தது. 1823-ல் தான் காப்பி வடநாட்டில் பயிரிடப்பட்டது முதன் முதலாக.

காப்பிச் செடிகளில் முக்கியமான இனங்கள் நான்கு. 1. அரேபிகா காப்பி, 2. லிபீரியா அல்லது ரொபஸ்டா காப்பி, 3. மொக்கா (பிரெஞ்ச்) காப்பி, 4. வங்காள காப்பி. முதல் இரண்டு ரகக் காப்பிகளும் தரத்தில் உயர்ந்தவை; அதிகமான பலனைத் தருபவை; நல்ல மணமும், ருசியும் உடையவை. இந்த இரண்டு ரகமும்தான் தென்னாட்டில் விளைகிறது! (அராபிகா 75%ம், ரொபஸ்டா 25%ம்)

கடைசி இரண்டு ரகமும்—மொக்கா காப்பியும், வங்காள காப்பியும்—மிக மிக மட்ட ரகமானவை ருசியும் மணமும் இல்லாதவை. இந்த **மட்டரக காப்பி** தான் **வட நாட்டில்** வங்காளம், அஸ்ஸாம், பம்பாய் முதலிய இடங்களில் பயிராகிறது. எனவே வட நாட்டுக் 'காப்பியை யாரும் விரும்புவது கிடையாது.

சுதந்திர இந்தியாவிலே உற்பத்தியைப் பெருக்க மூச்சு விடாது(!) உழைக்கிறதல்லவா அரசாங்கம்? அதன் பலனைப் பாருங்கள் :—1946-ல் காப்பி உற்பத்தி 25,200 டன், 1949-ல் 22,000 டன்; 1952-ல் 21,000! "உற்பத்திப் பெருக்கத்தை"ப் பார்த்தீர்களா? உற்பத்திப் பெருக்கமா செய்கிறது 'நமது' சர்க்கார்? 'உற்பத்திக் குறைப்பு' செய்துகொண்டே 'உற்பத்தியைப் பெருக்குவதாக' ஆட்சியாளர் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது ஒருபுறம்; மறுபுறம் வேதனையாகவும் இருக்கிறது, இதனால் பாதிக்கப்படுவது தென்னாடுதானே என்று எண்ணும்போது;

வேதனைகள் ஒன்று இரண்டல்ல, பல. நம் நாட்டிலே உள்ள பல காப்பித் தோட்டங்கள் நமக்குச் சொந்தம் அல்ல; அதனால் நமக்கு லாபமும் அல்ல. 'முக்காலே மூன்று வீசம்' வெள்ளையர்க்குச் சொந்தம்.

காப்பிச் செடிகள் காலத்திலே பூத்துக் குலுங்கி நிற்கும். மண மலர்களை நாடி வண்டுகளும், மலேரியாக் கொசுக்களும் கணக்கின்றி மொய்க்கும். அதில் வேலை செய்யும் தொழிலாளிகள் பலர் மலேரியாக் காய்ச்சல் வந்து இதனால் மடியவும் நேரும்.

தோட்டத் தொழிலாளர்களில் நூற்றுக்கு 90 பேர் திராவிடர்கள். காலை முதல் மாலை வரை உழைத்துழைத்து மாள்கிறார்கள். வெள்ளை முதலாளி அரட்டுவான்; கங்காணி மிரட்டுவான். வியர்வை சொட்டச் சொட்ட வேலை வாங்குவான். தோட்டப் பகுதிகளில் தொழிலாளர் போய் வர நல்ல ரோடுகள் இல்லை. மலை உச்சியிலே ஏற நல்ல கயிறு ஏணிகள் இல்லை. வாழ வசதியான வீடும், குடிக்க நல்ல நீரும், மலேரியா வந்துவிட்டால் மருத்துவம் பெற நல்ல மருத்துவ விடுதிகளும் நமது ஏழைத் தொழிலாளிகளுக்கு இல்லை. உழைக்கிறார்கள், வறுமையால் வாட்டப்படுகிறார்கள்.

ஆனால் ஆயிரம் ரூபாய் முதல் போட்டு ஆண்டுக்கு இரண்டாயிரம் வீதம் வெள்ளையன் கொள்ளையடித்துச் செல்கிறான், நமது திராவிடத்திலிருந்து. அதற்கு வடநாட்டு டில்லி சர்க்கார் பக்கமேளம் வாசிக்கிறது.

(i) இந்திய அரசாங்கம் "இந்திய காபி போர்டு" என்ற ஒரு ஸ்தாபனம் வைத்திருக்கிறது. இந்த போர்டு. தோட்ட முதலாளிகளிடம் விளையும் காப்பி முழுவதையும் **கட்டாயமாக** வாங்கிக்கொள்கிறது. பின்பு காப்பிக்கொட்டை ஏலம் விடப்படும். அதிக விலைக்குக் கேட்பவர்க்குக் கொடுக்கப்படும். இதில் வரும் லாபம் டில்லி சர்க்காரைச் சேரும்.

(ii) "இந்தியா காபி ஹவுஸ்கள்" என்ற ஓட்டல்கள் முக்கிய நகரங்களில் இருப்பதைக் காண்கிறோம். அங்கே காப்பி எப்போதும் இரண்டரை அணா;

காப்பித் தூள் விற்பனையும் உண்டு! இந்த ஓட்டல்களும் டில்லி சர்க்காருக்கே சொந்தம். இதில் வரும் லாபமும் டில்லி சர்க்காரையே சேரும்.

(iii) ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கும் ஏற்றுமதி வரி உண்டு. இந்த வரியும் டில்லி சர்க்காரையே சேரும்.

டில்லி சர்க்காருக்கு இதனால் மூன்றுவித லாபங்கள். வெள்ளையனின் பெட்டியும் வெள்ளிக் காசுகளால் நிறைகிறது.

இவ்வளவிருந்தும் டில்லி பீடம் காப்பிக்கென்று ஒரு நல்ல ஆராய்ச்சி நிலையம்கூட ஏற்படுத்தவில்லை. மைசூர் சர்க்கார்தான் சொந்தமாக ஒரு ஆராய்ச்சி நிலையம் வைத்துள்ளனர். அங்கே வடநாட்டு மொக்கா காப்பியில் கலப்பதற்கு 'சிக்கிரி'க்குப் பதிலாக புகழ் பெற்ற நமது அரபிகா காப்பியின் மேல் தோட்டை உபயோகப்படுத்தலாம் என்பதை அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். எனவே இதுவரை இறக்குமதி செய்யப்பட்டு வந்த 10 ஆயிரம் டந்தர் சிக்கிரி தேவையற்றுப் போகும்.

'காபி விளைகின்ற நாடும், மண்ணும் நம்முடையது. இங்கே வெள்ளையன் முதலாளி, வடவன் தரகன். நாமோ தொழிலாளி. வெள்ளையனுக்கும், வடவனுக்கும் தென்னாட்டவன் அடிமை!

வெட்கங்கெட்ட நிலை, வேதனையான நிலை, இதை விட வேறென்ன வேண்டும்?

காபி விலை உயர்ந்துவிட்டால் உடனே காரசாரமாக (ஆனால் 'சங்கதி' இல்லாமல்) தலையங்கங்கள் தீட்டும் பற்பல தினத்தாள்கள் இந்த உண்மைகளை அடியோடு மறைத்துவிடுகின்றன

அபிசீனியாவில் 'காஃபா' என்ற இடத்தில் முதன் முதலாக இயற்கையாக விளைந்து உலகெங்கும் பரந்தது காப்பி. அது இந்தியாவில் திராவிடத்தில்தான் விளைகிறது அதிகமாக. திராவிடக் காப்பிதான் மிகச் சிறந்த காப்பி. கோடிக் கணக்கான ரூபாய்களை அது லாபமாகத் தருகிறது. அந்த லாபமோ வெள்ளையனுக்கும் வடவனுக்கும் போய்ச் சேர்கிறது. சொந்த மண்ணுக்குரிய திராவிடன் தொழிலாளியாய், வறுமையில் வாடுகிறான்.

காப்பித் தோட்டங்களைத் திராவிடர் கையில் ஒப்படைக்கவேண்டும். காப்பியின் விநியோக உரிமையும் டில்லியிடமிருந்து பறிக்கப்படவேண்டும் அப்போதுதான் காப்பியின் வருமானம்முழுதும் திராவிடத்திற்குச் சேரும்—காப்பியும் உண்மையாகவே திராவிடத்திற்குச் செல்வமாகும்.

—"தீப்பொறி"

ஜனநாயகத்தைப்பற்றிச்

சில வார்த்தைகள்!

(கி. மனோகரன், பி. ஏ. ஆனர்ஸ்)

'ஜனநாயகம் வாழவில்லை' என்போரும், 'வாழுகிறது' என்று ஓங்கி அறைவோரும், 'வாழ முயற்சிக்கிறது' என்ற நம்பிக்கையும் சோகமும் கலந்த குரலில் தனது ஆர்வத்தை வெளிக்காட்டுவோரும் இருக்கிறார்கள்.

'ஜனநாயகத்திற்கேற்ற மண் இது அல்ல; இங்கே அது வாழாது' என துணிந்து கூற முற்படும் தொகையினரையும் ஏராளம் பார்க்கலாம்.

ஜனநாயகம் நடைமுறைக்கு ஏற்ற அரசியல் கோட்பாடல்ல என்று கூறி அதை அகற்ற வேண்டுமென்று வாதிப்போர் கூட்டமும் இல்லாமலில்லை. சாய்வு நாற்காலியிலே அமர்ந்து, முன்னே குதித்தோடும் பெருவயிற்றைத் தடவிக்கொண்டு, மரத்துப்போன தனது கால்களுக்குச் சூடேற்றும் பணியை ஒரு சிலருக்குத் தந்துவிட்டு, ஜனநாயகத்தைப் பற்றி காரசாரமாக விவாதிப்போர் சிலராக இருந்தாலும், அவர்களே எல்லாமாக அமைந்து விளங்குவதையும், விரும்பாவிட்டாலும் பார்த்துத் தீர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக எங்கேயும் ஜனநாயகத்தைப் பற்றிய பேச்சுக்கள். மேடையிலே, மாடியிலே, கல்லூரிகளிலே, கட்டிலறைகளிலே, பட்டிதொட்டிகளிலே அவரவர் முறைக்கும் நிலைக்கும் ஏற்றவாறு, சுரம் ஏறியும் இறங்கியும், அவரவர் பெற்றிருக்கும் தெளிவை அளவிட்டுக் காட்டும் முறையில் பேசிடக் காண்கிறோம்.

அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், சம சந்தர்ப்பம், வாய்ப்புகள், மக்கள் குரல்—இன்னும் இவைபோன்ற உள்ளக் கிளர்ச்சியூட்டும் வார்த்தைகள், புறப்படும் புத்தகங்களிலே, நயாகரா நீர் வீழ்ச்சியைப் போலப் பெருக்கெடுத்தோடும் பேச்சாளர்தம் பேச்சுக்களின் அலைமோதல்களிலே, கட்டறுத்தோடும் கவிதைகளிலே, உரை நடைகளிலே இடம் பெறுவதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது அடிப்படை உரிமை என்று சிலரும், சந்தர்ப்பத்தின் தேவை எனப் பலரும், பேசியே தீருவது என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆட்சிப் பீடத்திலிருப்போர், "பேசித் தீர்த்தே விடுவது" என்று அவர்கள் எடுத்துக்கொண்ட சூளுரையின் முடிவில் ஜனநாயகம் படாத

மாடு படுவதை அனுதாபத்தோடு நாடு கவனிக்காமலில்லை.

மாறிக் கொண்டிருக்கும் உடலில், விரைந்து மாறிக்கொண்டிருக்கும் எண்ணக் கோவைகளின் மத்தியில் நாம் நிற்கிறோம். கடந்த காலத்தின் செல்லரித்துப் போன நூற்றாண்டுகளிலிருந்து பிறவியெடுத்த புதுப் புது கொள்கைகள் மனித சமூகத்தின் தீர்ப்புக்காகக் காத்து நிற்கின்றன. இந்நேரத்தில் நாம் வாழும் நூற்றாண்டு ஜனநாயக நூற்றாண்டு என்றும் பேசிக் கொள்கிறோம். அப்படியானால் ஜனநாயகம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் கடமை பிரஜைகள் எல்லோருக்கும் உண்டு. தத்துவங்களைப் புரிந்து கொண்டால் தான் அதைக் கையாளுவோர் இழைக்கும் பிழைகளையும், அதன் பேரில் எவ்வளவு திறமையாக தன்னை அவர்கள் மறைத்துக் கொள்ள முயலுகிறார்கள் என்பதையும் உணர முடியும். ஒரு முறை உணர்ந்து விழித்து விட்டால் விழிப்புணர்ச்சியின் பலனை ஆட்சிக் குழுவின் முகமூடி கிழித்தெறியப் படவும், அவர்களின் அரசியல் "நிர்வாண"த்தை உணரவும் முடியலாகும்.

ஜனநாயகம் (Democracy) என்ற வார்த்தை இரண்டு கிரேக்க வார்த்தைகளின் சங்கிலித் தொடராகும். (Demos) என்ற வார்த்தைக்கு மக்கள் என்றும், (Cratos) என்ற சொல்லுக்கு அதிகாரம் அல்லது ஆட்சி என்னும் பொருளாகும். இணைந்த இவ்விரு வார்த்தைகள் தரும் மக்களாட்சிக்குத் தோற்றுவாய் கிரேக்கம் என்பது வரலாறு. ஏதென்ஸ் நாட்டின் ஆட்சியமைப்பின் எழிலோவியமாகத் திகழ்ந்த ஜனநாயகம் வெற்றி பெற முடியவில்லை. கிளேஸ்தனீஸின் சீர்திருத்தச் சட்டங்களும், ஏதென்ஸின் பொற்காலத்தின் நற்காவலனாக விளங்கிய பெரிக்ளிஸின் (Pericles) ஆட்சி அமைப்பு முறைகளும் வாழ்ந்து சிறந்த ஜனநாயகப் பண்பை உலகிற்கு முழக்கிக் கொண்டிருக்கிறது. இந்நாளில் நிலவும் ஜனநாயகக் கொள்கைக்கும், அன்று அழிவிலிருந்த மக்களாட்சிப் பண்பிற்குமுள்ள வேறுபாடுகளை இங்கே உணர்தல் நன்றாம்.

இன்றைய நாட்களிலே ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சிக்கும் முற்போக்கிற்கும் மிகத் தேவையான அம்சம் என்று கருதப்படுவது, கட்சிகள் – பலம் பொருந்திய எதிர் கட்சிகளாகும். இந்தக் கட்சியமைப்பு முறைகளைக் கடந்த காலம் கண்டிருக்கவில்லை.

கடந்த காலத்தின் ஜனநாயகம் நேரடியானது. இன்றைய ஜனநாயகம் மறைமுகமானது; அல்லது பிரதிநிதித்துவம் பெற்ற ஒன்று.

அதிகாரப் பங்கீடு முறையும், தடித்தலும், சமனிலைப் படுத்

தலுமான நிர்வாக முறைகள் அன்றைய மக்களாட்சி முறையிலே யில்லாத முக்கியமான நெறிகளாகும்.

இன்றைய ஜனநாயக நாடுகள், தனி நபருக்காக — மனிதனுக்காகத் நிலவுகின்றன. நாட்டிற்காக தனி மனிதன் என்ற முறை அந்தக் கால குறிக்கோளாகும். விஞ்ஞான ரீதியாக அரசியல் கோட்பாடுகளை வகுத்துத் தொகுத்த முதல் கிரேக்க நாட்டின் அரசியல் மேதை அரிஸ்டாட்டல், நாடுதான் இறுதி முடிவென்றும், மக்கள் அந்த நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்குரிய வழிவகைகள் என்றும் அவர் குறிப்பிட்டு, நாட்டை மனித உடலாகப் பாவித்து, அதன் உறுப்புகளே மனிதர்கள் என்றும், நாடு அல்லது அரசு இன்றி தனி உறுப்புகள் முழுத்தன்மை பெறுவதில்லை என்றும் வாதாடினார். இந்தப் பிரச்சினையிலே நாம் இங்கே ஈடுபட வேண்டியதில்லை. தேவையானது, கடந்த கால கிரேக்கம், தனி மனிதனை விட நாட்டிற்கு பூரணத்துவமும் முக்கியத்துவமும் நல்கி அதன் அடிப்படையிலே உருவாகிய மக்களாட்சி முறைக்கு மாலையிட்டது என்பதுதான்.

நிலவும் ஜனநாயகம் இந்தக் கருத்துக்களின் புதை குழியிலே உருவெடுத்துப் பொலிவுறும் மணி மண்டபமாகும்!

16–ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம். ஐரோப்பாவெங்கும் புதிய ராஜரீகம் தனது காலை ஊன்றிக் கொண்டது. பாராளு மன்ற சட்ட முறைகள் பெரும்பாலும் செல்வாக்கிழந்தன. இங்கிலாந்தில், டியூடர் பாராளுமன்றம் முடியாட்சியின் துணையோடு ஒரு சில சட்டங்களை நிறைவேற்றிற்று. ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் நேரடி மக்களாட்சி முறை தோன்றி மறையும் மின்னலாகவு மிருந்தது.

17-ம் நூற்றாண்டு! ஐரோப்பிய நாடுகளில், வரம்புகடந்த மன்னராட்சி முறை கோலோச்சியது. லூயி பதினான்காம் மன்னனின் வழியிலே அக்கம் பக்க நாடுகள் விழிவைத்தன; நடைபோட்டன.

ஸ்டூவர்ட் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து பாராளு மன்றம் விரிவிதிப்பு முறை, சட்டமியற்றல் இவைகளிலே தனது திறமையைப் பூரணமாகக் காட்டியது.

18-ம் நூற்றாண்டுதான் ஜனநாயகத் தத்துவங்களுக்கு சிறப்புத் தேடித் தந்த நூற்றாண்டாகும். மாண்டஸ்க்யூ, வால்டயர், ரூஸோ போன்ற சிந்தனைச் சிற்பிகளின் எழுத்துக் கருவூலங்கள் மக்களாட்சி முறைக்குப் பாதை செப்பனிட்டுத் தந்தன.

அமெரிக்க நாட்டு சுதந்திரப் போராட்டமும், பிரஞ்சுப் புரட்சியும் மக்களாட்சியின் தேவைகளைப் பகிரங்கப் படுத்தின.

அரசியல் சட்டங்கள் எழுதப்பட்டவைகளாகவே யிருக்க வேண்டும் என்றும், அதன் மூலம் வரையறுக்கப்பட்ட உரிமைகளின் மூலமே ஆட்சி முறை நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவகம் செய்தன. ஆட்சிப் பீடத்துள்ளோரின் அதிகாரம், பொதுவான சுதந்திரம், மனித உரிமைகள், ஏற்படுத்தப்பட்ட சர்க்கார்- இவைகளுக்கிடையே சச்சரவின்றி சுகமான உறவு முறை எழுதப்பட்ட சட்டங்களின் மூலமே முடியும் என்ற ஞானமும் உருவாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதி; முற்போக்கான சீர்திருத்தங்கள், ஆட்சி முறையின் அடிப்படையாக அமைவதற்காக ஏற்பட்ட போராட்டங்களை சந்தித்தது. இங்கிலாந்து நாட்டின் தொழில் புரட்சி, மத்யதர வர்க்கத்தினருக்கு வாக்குரிமையை வாங்கித் தந்ததோடுகூட, புதிய தொழில் வர்க்கத்தையும் உருவாக்கி, அந்த வர்க்கத்தினர் கோரிய அதிகமான — ஆனால் நியாயமான உரிமைகளின் மூலம் புதிய ஜனநாயகத்திற்கு திட்டவட்டமான சூழ்நிலையை உண்டாக்கியது.

கடந்த இரண்டு மாபெரும் உலகப் போராட்டங்கள் சட்டபூர்வமான அரசுகளின் வாழ்விற்கும், முரண்பட்ட சக்திகளின் வீழ்ச்சிக்கும் ஆணை பிறப்பித்தன. ஒரு சில பகுதிகளிலே புதிய ஏகாதிபத்யங்களையும் உருவாக்கின. காலத்தின் விசைப் போக்கைத் தாக்குப்பிடிக்காத இவைகள் சுக்குநூறாகச் சிதறி, சின்னா பின்னப்பட்டு, வளர்ந்து வரும் ஜனநாயக சக்தியின் அறுதாயக் கண்ணிரைக் கடைசியாகப் பெற்றுக்கொண்டு, மரியாதையோடு மறைந்து விட்டன.

ஆகவே இருபதாம் நூற்றாண்டு ஜனநாயக நூற்றாண்டு என்று கூறிக் கொள்வதிலே அர்த்தமும் பெருமையுமுண்டு. ஜனநாயக மேடையை நிரந்தரமாக நிலை நாட்டிக் கொள்வதற்காக, தூக்கு மேடையைத் தழுவியோர் எண்ணற்றோர். மக்கள் குரலே ஆண்டவன் குரல் என்ற கொள்கையை பாரறிய முழக்கினைய இயற்கைக்கும், நெறி முறைக்கும், பகுத்தறிவிற்கும் அப்பாற்பட்ட தெய்விக உரிமைக் கொள்கைகள் வழி விட்டே ஆகவேண்டும் என்றும் பேசி, தனது "நெடுவாழ்வின் பெரும் புகழைச் சாவில் காட்டி"ச் சென்றவர்கள் தொகை ஏராளமாகும். சிறைக் கூடத்தின் தேய்ந்து போன கம்பிகளை எண்ணி எண்ணி, தனது வாழ்க்கையின் வசந்த காலத்தைச் சுவைக்க முடியாமல், வாழ்வின் மாலை நேரம் வரை குளிர்காலத்தைத் தழுவிக் கிடந்தவர்களின் தியாகம், மக்களாட்சியின் மலர்ச்சிக்கே. எனில், அந்த ஆட்சி முறைக்கு அதன் பெயராலேயே இழுக்குத் தேடுவோர் யாராயினும் சரி, அவர்களைப் பச்சைத் துரோகிகள் என்றே வரலாறு பறை சாற்றும்.

* * *

வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படும் ஹெராடற்றஸ், ஜனநாயகத்தை அறிமுகப் படுத்தும்போது,

"ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க அமைப்பு முறை. நாட்டின் சட்ட பூர்வமான அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பின் அல்லது வகுப்புகளின் கரங்களுக்குத் தரப்படாமல் சமுதாயம் முழுமைக்கும் ஒப்புவிப்பதாகும்" என்றார். ஜனநாயகத்தைப் பற்றிய விளக்கவுரை விளம்புதற் கேற்ற தனிப் பெருந்திறமைசாலியான பிரைஸ் பிரபுவும் (Lord Bryce) இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தினார்.

"ஜனநாயக அரசாங்கம் என்பது ஒரு சமுதாயம்; அதில் மக்களே சக்தி வாய்ந்தவர்கள்" என்றார், ஐவர் பிரௌன்.

எல்லோரின் உள்ளத்தையும் கவரும் முறையில், எண்ணத்தைக் கிளறும் வகையில், ஜனநாயகத்திற்கு விளக்கந் தந்தார் லிங்கன். அவர் கூறினார். "மக்களாட்சி என்று கூறுவது, மக்களே, மக்களால் மக்களுக்காக நடத்தும் ஆட்சி" யென்று.

பேராசிரியர் சீலி ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கை வெளிப்படுத்தும் வாய்ப்பை ஜனநாயக ஆட்சிமுறை வழங்குகிறதென்றார்.

தரப்படும் அத்தனை விளக்கங்களும், மனிதனை, மனித உரிமையை, அவனுக்குள்ள நியாயமான அதிகாரத்தை, பங்கை, அந்தஸ்தை நிலை நாட்டுவதைப் பார்க்கிறோம். மனிதனே இறுதி முடிவு. ஆட்சிகளும், நாடுகளும் அவனது பூரணத்துவத்திற்கும், எண்ணங்கள், தேவைகள், விருப்பங்கள் இவைகளின் நிறைவேற்றுதலுக்கு முரிய வழிகள் அல்லது ஏஜெண்டுகள் என்பதையும் ஜனநாயகம் வற்புறுத்துகிறது.

ஆட்சியாளர்கள் எடுக்கின்ற முடிவுகள், தொடுக்கின்ற சர்வதேசீய விண்ணப்பங்கள்- இவைகளிலே மக்களின் எண்ணங்கள் தெளிவாகத் தெரிய வேண்டும். எவ்வளவுதான் திறமைசாலிகளானாலும் தனிப்பட்டவர்களின் கையிலே முழு அதிகாரத்தையும் ஒப்படைப்பது ஏதேச்சாதிகாரம் உருவாகத் துணை செய்யுமே தவிர ஜனநாயகம் வாழ வழி செய்யாது. சட்டங்களை உருவாக்குகிற அரசு, அதை உருவாக்கும் நேரத்தில், மக்களின் பிரதிநிதிகளுக்கு—அதன் மூலம் மக்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

ஓட்டுரிமை என்பது மனித நாகரீகத்தின் வரலாற்றுழியிலே

கண்டெடுத்த முத்தென்றால், அந்த நன் முத்தை, ஜனநாயகம் மக்களுக்கு மகிழ்ச்சியோடளிப்பதாகத்தான் கருதவேண்டும். அது மட்டுமா? நாட்டிலே புரட்சியின் தேவையைக் குறைத்து, இல்லாமலே செய்ய முயலுகிறது. ஏனெனில், புரட்சிக்குரிய காரணங்களைக் கண்டறிந்த அரிஸ்டாட்டல் அதற்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டார், மக்கள் தமது சமத்துவத்தை நிலை நாட்டத் துடிக்கும் எல்லையற்ற விழைவு மிகுதி என்று. அந்த விழைவு எழத் தேவையில்லாத அளவு, ஜனநாயகம் சமத்துவத்தைப் பெரிதும் வலியுறுத்துகிறது. ஜனநாயம் தனது உயிர்க் கொள்கைகளிலே ஒன்றாக அதைக் கருதுகிறது. அதன் வெற்றியேதான். ஜனநாயகத்தின் வெற்றியுமாகும். இம்மட்டோ?

மனிதனது அடிப்படை சுதந்திரங்களான எண்ணவுரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, கூடுமுரிமை, ஸ்தாபனவுரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, வழிபடும் உரிமை இவைபோன்ற எண்ணற்ற உரிமைகளை ஜனநாயகம் கொண்டிருக்கிறது. இந்த உரிமைகளை ஒழித்துக் கட்டிவிட்டு ஆணவ அரசுக் கட்டிலிலே அமர ஆசைப்படுவோர், தூக்கி எறியப்படுவார்கள் என்பதைக் காலம் நிரூபித்துக்காட்டியாகி விட்டது.

எண்ணச் சுதந்திரம், எழுத்துரிமை எடுத்துக்கூறும் உரிமைகளின்றி எந்த ஒரு மனிதனும் இந்த சமுதாய அமைப்பிலே தற்காப்போடு வாழ இயலாது. தனி மனிதனின் வாய்க்குப் பூட்டிட்டு, மயான அமைதி தவழும் இடத்திற்குத் துரத்துவதன் மூலம் அவன் ஊமையாக்கப் படுகிறான்; உணர்ச்சியற்ற கட்டையாகிறான். அவனது விலையுயர்ந்த மனிதத் தன்மைகள், ஆட்சியாளர்களால் எடுக்கப்படும் முடிவுகளில் இடம் பெறாமல் தூக்கி எறியப்படுகின்றன. விளைவு, சமுதாயம் தனி நபர்களின் மணல் மேடாக மாறுகிறது. எப்போது ஒரு சர்க்கார், எந்தக் காரணமாவது காட்டி, அடிப்படை உரிமைகளைப் பின் வாங்கிக் கொள்ளுகிறதோ, அப்போதே அந்த நிர்வாகம் ஏதேச்சாதிகாரத்திலே தன்னை ஒன்றுபடுத்திற்றென்று பொருள்.

புத்திசாலித்தனமான ஒரு சர்க்கார், எதிர் கட்சித் தலைவர்களின், கட்சிகளின் பயமற்ற, பலனீட்டும் விமர்சனங்களிலிருந்து பெருமளவு கற்றுக் கொள்ளுகிறதே தவிர-முடியுமே ஒழிய—தன்னைச் சுற்றியிருக்கும் தனக்கு வேண்டிய சில குறிப்பிட்டவர்களின் புகழ் மாலைகளினின்றோ, துதிகளினின்றோ அல்ல.

சமுதாயத்தைச் சிறைக் கூடமாக மாற்றி—அஞ்சி நடுங்கும் மான் கூட்டங்களாக மக்களையும் மாற்றி, கலை, மொழி, விஞ்ஞானம், கலாச்சாரம், கல்வி

இவைகளைத் தமது எண்ணங்களை, கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் கருவிகளாகப் பயன் படுத்துவது ஏதேச்சாதிகாரிகளின் முழு நேர வேலையாகும்.

மனித சமூகம், கோரிக்கைகளின் வளர்ப்புப்பண்ணை என்றும் தேவைகளின் அமுத சுரபி என்றும், எனவே, அவர்களின் ஒரு கோரிக்கையை நிறைவேற்ற முயலுவது எண்ணற்ற கோரிக்கைகளை நிறைவேற்றத் தன்னை இழுத்து வரும் என்றும், மறுபின், புரட்சிப் பெரு வெள்ளப் பெருக்கின் கதவுகளை அது திறந்து விடுமென்றும் ஏதேச்சாதிகாரி அஞ்சுகிறான். மக்கள் குரல் தன் காதில் விழாத வகையில், வழக்கம்போல, கானக் குரலெழுப்பும் கோகில வாணிகளின் கலாபத்திலும், இன்னிசை முழக்கிலும், செம்பவள இதழ்ச் சேயிழையார்கள் தம் இதழ் ஒத்திட ஒலிகளிலும் இலயித்துக் கிடக்கிறார்கள். துப்பாக்கி முழக்கங்கள் அவனுக்கு வாண வேடிக்கைகள்; அதன் மூலம் துளையுண்டு சிதறியோடும் தலைகள், மண்டை ஓடுகள், விநோதப் பொருட்களாகின்றன. மனிதர்கள் கிள்ளுக் கீரைகள், அல்லது சுக்கு நூறாக்கப் பட்ட கண்ணாடித் துண்டுகள், பழங் கந்தல்கள், அல்லது மண்ணோடு மண்ணாகத் தேய்ந்து விட்ட உருக்குலைந்த பழைய செருப்பாணிகளாக அவனுக்குத் தோற்றமளிக்கிறார்கள். மனித உயிர்களைவிட முழந் துணிக்கு மதிப்பளிக்கும் விரிந்த இதயம் பெற்ற (?) கொடுங்கோன்மையாளன் ஜனநாயகப் பட்டுத் துணிகளால் தன்னை மறைத்துக் கொண்டு, வெறுக்கத் தகுந்த அரசியல் சாகசங்களிலே ஈடுபடுகிறான். இவ்வித கோட்பாடுகளின் ஆணிவேரில் கத்தி நீட்டுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஜனநாயகமே, நீ வாழி என்று வாழ்த்துவோம்.

மக்களே முழுவல்லமை வாய்ந்தவர்கள். கடைசி அதிகாரம். அவர்களிடமேதான், அவர்களின் தீர்ப்புகள்தான் நிலைத்தவை என்பது ஜனநாயக வாதமாகும். ஆகவே, ஒரு நாட்டிலே ஜனநாயகம் வாழ, வெற்றி பெற தேவையான பண்பாடுகள் எவை?

சுருங்கிய எல்லைக் கோடு—அளவிலே சிறுத்த நாடுகள், ஜனநாயகம் வாழ வகையான பூந்தோட்டம் என்கிறார்கள். உதாரணமாக, ஸ்விட்சர்லாந்தைக் காட்டுகிறார்கள். அளவில் மட்டும் சுருங்கியிருந்தால் போதுமா? இல்லை—மக்கள் பெருமளவு புத்திசாலிகளாகவும், அறிவுத் தெளிவு பெற்றவர்களாகவும், கடமையுணர்ச்சியின் காவலாளிகளாகவும், நாட்டை, அதன் பல்வேறு வகை முற்போக்கை எல்லாவற்றிற்கும் மேலானதாகக் கருதும் விரிந்த பண்பாடுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். தன் பெண்டு, தன் பிள்ளை, வீடு,

சுற்றம் என்னும் கடுகத்தனை உள்ளம் ஜனநாயகத்தின் கூற்றமாகும்.

வலுமிக்க, ஆனால் உஷாரான பொதுஜன அபிப்பிராயம் தேவை. ஜனநாயகத்தின் எதிரிகளாக பிரைஸ் பிரபு பிரகடனப் படுத்துவது, சோம்பேறித்தனமும், இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்றிருந்துவிடும் அருவருக்கக் கூடிய கவலையின்மையுமாகும்! அநீதியைக் கண்டு குமுறி எழாமல், துடைத்திடும் மார்க்கந் தேடாமல், தன்னை ஒதுக்கி வாழ்வோர், கொடுங்கோன்மையாளர்களைவிடக் கொடுமையானோர். அவர்கள் அதன் மூலம் ஆணவ ஆட்சிக்கு மறைமுகமாக உதவுகிறார்கள் என்றே பொருளாகும்.

அரசியல் மன்றங்களிலே மட்டுமன்றி, பொருள் துறை, சமூகத் துறை - இங்கேயும் ஜனநாயகம் தவிர்க்க முடியாத தேவை. இங்கிலாந்து நாட்டின் தொழில் புரட்சியின் விளைவு இந்தத் தேவையைத் தெளிவாக நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

மக்கள், எந்தப் பிரச்சினையையும் ஆய்ந்து முடிவு கட்டி, தீர்ப்புரை தரும் திறமைமிக்கவர்களாக விளங்குதல் வேண்டும்.

ஜனநாயகத்தில், தனது பிரதிநிதியைத் தானே தேர்ந்தெடுக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் பிரஜைகளுக்கிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, எந்த நேரத்தில், சுருக்கமாக, பிரதிநிதி என்ற வார்த்தையின் பொருளுக்கு லாயக்கற்றவராக மாறுகிறாரோ, அந்நேரமே, அவரைத் திருப்பியழைக்கும் உரிமையை அந்தத் தொகுதி மக்கள் பெறவேண்டும் என்கிறார், ஸ்டாபோர்டு கிரிப்ஸ். இலத்தீன் அமெரிக்காவில், ஒரு சில நாடுகளிலும், ஓரளவு ஸ்விட்ஸர்லாந்திலும் இம்முறை அமுலிலிருப்பதைக் காணலாம்.

"தனக்குரிய சர்க்காரைத் தேர்ந்தெடுக்கும் திறமையின் வெற்றியிலே ஜனநாயக வெற்றியிருக்கிறது" என்கிறார் அறிஞர் டார்பின்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் ஜனநாயகம் என்ற அரசியலமைப்பு ஒன்றே சாலச் சிறந்தது. குறைபாடேயற்றது என்று நிரூபிப்பதல்ல. அது முடியாத காரியம். ஏனெனில், ஜனநாயகம் எந்த அளவு காதலர்களைப் பெற்றிருக்கிறதோ, அந்த அளவு எதிரிகளையும் சம்பாதித்திருக்கிறது. எதிரிகள், ஜனநாயகத்தைப் பற்றிக் கூறுகின்ற வார்த்தைகளில் அடியோடு பொருளில்லை என்று கூறிவிட முடியாது. ஹென்றி மெயின், பேராசிரியர் லீக்கி, போன்றவர்களின் கண்டனக் கணைகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஜனநாயகம் தாங்கியது. எனினும் சாகவில்லை!

அவர்களின் கருத்துக்கள் ஜனநாயக சர்க்கார் நிரந்தரமானதல்ல; அசைந்தாடும் அமைப்பென்றும், பலமற்ற அடிப்படையானதெனவும், எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் தருகிறதே தவிர, தரத்திற்கோ, தன்மைக்கோ அல்லவென்றும் பொறுப்பற்ற தன்மையின் நிலைக்களன் என்றும், சுதந்திரவுணர்வை இது வளர்த்து வருவதில்லை. சிறுபான்மையோரின் ஆசைகள், உயர் எண்ணங்கள், முளையிலேயே கிள்ளியெறியப் படுகின்றன. அல்லது வெந்து சாம்பலாகின்றன என்றும், அறியாமைக் குன்றுகளாகவிருக்கும் மக்களின் கையில், நாட்டின் முக்கியமான அதிகாரத்தை ஒப்புவிப்பது, வலுவான ஒரு தலைவனை, தாள் பணிந்து நடக்கும் குணம் படைத்தோரின் கையில் ஒப்படைப்பது ஆகுமென்றும், அது தற்கொலைக்கொப்பானதென்றும் கூறுவதாகும். இத்தனை கண்டனங்களுக்கும் பதில், ஜனநாயகம் வெற்றி பெற தேவைப்படும் பண்புகள் நிரம்பி அமைவதிலேயிருக்கிறது.

திராவிடத்தின் தன்னிகரற்ற அரசியல் மேதை அறிஞர் அண்ணா அவர்கள்,

"எதேச்சாதிகாரம் காட்டுத் தீ என்றும், ஜனநாயகமோ ஒரு வீட்டு விளக்கு" என்றும் கூறுவதன் மூலம், ஜனநாயகத்தின் அமைதியான, அமைக்கப் பட்ட பாதை வழி நடைபோடும் அதன் பண்புகளைத் தெளிவு படுத்துகிறார்.

ஜனநாயகத்தைப் பற்றிய இவ்வளவு ஆவேசமான கண்டனங்களைத் தெரிவித்தவர்கள் குறிப்பிட்ட பல கருத்துக்களிலே ஒன்று, மக்களாட்சியிலே, பாராளுமன்றம் அல்லது சட்டசபைகள் வெறும் பேச்சுக் கடைகளாக மாறிவிடுகின்றன என்பதாகும். வளருகின்ற பொறுப்புணர்ச்சி, இந்த சந்தேகத்தை நிச்சயம் நீக்கியே தீரும்.

பல அரசியல் கோட்பாடுகளை ஒப்பிட்டு நோக்க ஜனநாயகம் பெருமளவு குறைபாடற்ற கோட்பாடாக இலங்குதல் கண்கூடு. நடைமுறைக்கு சாத்யமானது என்பதை உணர்கிறோம். அதன் வெற்றியை எட்டிப் பிடிக்க, நிரம்ப விலை கொடுத்தாக வேண்டும் என்பதையும் அறிகிறோம். எனினும் பரவாயில்லை. மனிதத் தன்மைக்கு மதிப்புத்தேடி, வாழ்த்தும் இந்த வகையான கோட்பாட்டை கடிமணம் செய்து கொள்வதென்றே நாடுகள் பல துணிந்து மணமன்ற மேறிவிட்டன.

எட்வாட் கார்பென்டர் கூறினார், "O! disrespectable democraoy, I love you!" இதன் உள்ளார்த்த பொருள், எந்த இலட்சியத்தையும்விட உன்னிடம் குறைகள் குறைவு. எனவே காதலிக்கிறேன் என்பதன்றோ? —"முரசொலி"

சிறந்த கிராம ஊழியம்

செய்ய, ஆசிரியர்களுக்கு உயரிய வழி—**சித்த வைத்தியம் பயின்று** கிராமத்து ஏழைமக்களுக்கு நல் ஊழியம் செய்வதாம். இக்காலத்தில் நவீன முறையில் வைத்தியம் பயின்று பட்டம் பெற்ற M. B., B. S., முதலானோர் நடத்தும் முறை மிக மிக செலவு அதிகமாயிருப்பதால், ஏழை மக்கள் அதைக் கையாளவோ, பெற்று நன்மை பெறவோ இயலாமல இருக்கின்றனர். ஆகவே, கிராம வாசிகள் இன்னும் பல கிராமங்களில் தகுந்த வைத்திய உதவியின்றி பெருந்தொல்லைப் படுகின்றனர்.

முதல் முதலாக இக்குறையை நமது தமிழ் நாட்டு சிறந்த முறையில் நீக்கவும், இரண்டாவது குறைந்த வருவாய் உள்ள ஆசிரியர் தங்கள் வருமானத்தையும், செல்வாக்கையும் நல்ல முறையில் உயர்த்திக்கொள்ளும் நோக்கத்துடனும்,

சித்த வைத்தியக் கல்லூரி

தாசர்புரம் P. O. தின்னனூர் (சென்னை அருகில்)—பள்ளி வேலையில் இருந்துகொண்டே, சித்த (தமிழ்) வைத்தியம் கற்று நல்ல முறையில் வைத்தியத் தொழில் செய்ய, தபால் மூலம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகையால், ஆசிரியர்களும், மற்ற தங்கலம் கருதா தேச சேவை செய்ய விருப்பமுள்ளவரும், இவ்வகுப்பில் சேர்ந்து வைத்தியம் கற்று ஏழை மக்களுக்கு உதவி புரியலாம்.

கல்வி, பயிற்சி, புத்தகம், பரிசோதனை, டிப்ளோமா, வைத்திய அனுபவம் முதலிய விபரங்களுக்கு, தபால் ஸ்டாம்பும், தெளிவான தபால் விலாசமும், கல்லூரி பிரின்சிபாலுக்கு அனுப்பி எழுதிப் பெறவும்.

சி. வை. கல்லூரி, தாசர்புரம் P. O. தின்னனூர் R. S.
(சென்னை அருகில்)

சுழலும் உலகம்

குமுறும் எரிமலை

ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்னால், எகிப்து நாட்டின் எல்லைக்குள் இருக்கும் சூயஸ் கால்வாயை நிர்வகித்து வந்த கம்பெனியைத் தேசிய மயம் ஆக்கினாரல்லவா அந்த நாட்டின் தலைவர் நாசர்—அதனால் ஏற்பட்ட குமுறலும் கொந்தளிப்பும் இன்னமும் அடங்கக் காணோம். பிரிட்டனின் சீற்றமும், பிரான்சின் கோபமும், அமெரிக்காவின் ஆத்திரமும் இன்னமும் பழையபடியேதான் இருந்து வருகின்றன. சூயஸ் பிரச்சினை தோன்றி ஏறத்தாழ இரண்டு மாதங்கள் முடிந்தும் அது ஓர் குமுறும் எரிமலையாகவே இருந்து வருகிறது. எந்த நேரத்தில் எரிமலை வெடிக்குமோ, என்னென்ன ஆபத்துகள் அதனால் நேருமோ, உலகப் பெரும்போர் மூண்டு அதனால் மானிட சாதிக்கே மாபெரும் கேடு விளையுமோ என்றெல்லாம் ஏற்பட்ட அச்சம் உலக அரங்கில் நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறதே தவிர குறைவதற்கான அறிகுறி எதனையும் காணோம்.

ஆகஸ்டு 16-ந்தேதியன்று, இலண்டன் நகரில், இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காகப் பிரிட்டனால் கூட்டப்பட்ட பல்வேறு நாடுகளின் மாநாடு தொடக்கமாயிற்று. மாநாட்டில் இந்தியா, ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, டென்மார்க், ஆஸ்ட்ரேலியா, இலங்கை, எதியோபியா மேற்கு ஜெர்மனி, இந்தோனீசியா, இத்தாலி, ஜப்பான், நார்வே, ஸ்வீடன், பெல்ஜியம், பாகிஸ்தான், நியூஜிலந்து, பெர்சியா, போர்ச்சுகல், துருக்கி, ஹாலந்து ஆகிய 22 நாடுகள் கலந்து கொண்டன. மாநாடு, எழு நாட்கள் நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளில் இந்தியா—ரஷ்யா—இந்தோனீசியா—இலங்கை ஆகிய நான்கு நாடுகளும், சூயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கும் உரிமை நாசருக்கு நிச்சயமாக உண்டு என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து விட்டன.

மாநாட்டில், இந்தியா, ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. சூயஸ் கால்வாயைநிர்வகிக்கும் முழு அதிகாரமும் எகிப்திய அரசாங்கத்தால் அமைக்கப்படுகிற எகிப்தியக் கம்பெனியிடமே இருக்கவேண்டும் என்பதும் ஆனால் அந்தக் கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்கள் செலுத்தவேண்டிய கட்டணம்

முதலிய நிர்வாக விவரங்கள் பற்றிய ஆலோசனை தெரிவிப்பதற்காக மட்டும் அந்தக் கால்வாயைப் பயன் படுத்தும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதும், இந்தியத் தீர்மானத்தின் அடிப்படைகள்.

ஆனால் அமெரிக்கா இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாமல் இதற்கு நேர் முரணான மற்றோர் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. சூயஸ் கால்வாயை நிர்வகிக்கும் அதிகாரம் எகிப்திய கம்பெனியிடம் இருத்தலாகாது என்பதும், அந்த அதிகாரம் அந்தக் கால்வாயைப் பயன்படுத்தும் எல்லா நாடுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு சர்வதேசியக் கம்பெனியிடமே இருத்தல் வேண்டும் என்பதும், அமெரிக்கத் தீர்மானத்தின் அடிப்படைகள். சூயஸ் கால்வாயிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியைப் பெறுவதற்கு மட்டுமே எகிப்திய அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்றும், கால்வாயின் முழு நிர்வாகத்தையும் எடுத்துக்கொள்ளும் உரிமை அதற்குக் கிடையாது என்றும் அமெரிக்காவும் பிரிட்டனும் அவற்றைச் சார்ந்த ஏனைய பல நாடுகளும் வாதாடின.

அமெரிக்கத் தீர்மானத்தை எகிப்து நிச்சயமாக ஒப்புக் கொள்ளாது என்பதை இந்தியப் பிரதிநிதி மாநாட்டில் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் காட்டினார். அந்தத் தீர்மானம் எகிப்தின் தனியாட்சி உரிமையையே பறிப்பதாக இருக்கிறது—ஆகவே அந்தத் தீர்மானத்தால் சிக்கல் தீராது—நீதி கிடைக்காது—அமைதியும் உருவாகாது என்பதை ரஷ்யாவும் இலங்கையும் எடுத்துக் காட்டின. என்றாலும், இலங்கை—ரஷ்யா—இந்தியா—இந்தோனீசியா ஆகியவை தவிர, மாநாட்டில் கூடியிருந்த ஏனைய 17 நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, அதனை நாசருக்கு நேரில் அனுப்பி வைப்பது என்று முடிவு செய்தன.

ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா, எதியோப்பியா, பெர்சியா, ஸ்வீடன் ஆகிய ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவே இந்தப் பணியைச் செய்யவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆஸ்ட்ரேலியா முதலமைச்சர் ராபர்ட் மென்சீஸ் தலைமையில் எகிப்துக்குச் சென்ற இந்தக் குழு செப்டம்பர் 3-ந்தேதி முதல் 9-ந் தேதி வரை அங்கே தங்கியிருந்து, எகிப்தியத் தலைவரைப் பலமுறை கண்டு பேசி, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தை விளக்கிக் காட்டினர். ஆனால், நாசர், அந்தத் தீர்மானம், தன்னுடைய நாட்டின் தன்மானத்திற்கே, இழுக்குத் தேடுவதாக இருக்கும் காரணத்தால் அதனை ஒப்புக் கொள்ள முடியாது என்று தெரிவித்து விட்டார்.

மறுபடியும் இலண்டன் நகரில் பிரிட்டனின் அழைப்பை ஏற்று, அமெரிக்கத் தீர்மானத்தை ஒப்புக்கொண்ட 18 நாடுகளின், பிரதிநிதிகளும் செப்டம்பர் 19ம் நாள் முதல் கூடிப் பேசி வருகின்றனர்.

எந்தெந்த நாடுகளின் கப்பல்கள் சூய்ஸ் கால்வாய் வழியாகச் செல்கின்றனவோ அந்தந்த நாடுகளெல்லாம் சேர்ந்து பயன் படுத்துவோர் கழகம் (Users' Association) ஒன்று அமைக்கலாம் என்றும், சூயஸ்கால்வாயை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதையும் இந்தக் கழகத்திடம் ஒப்படைக்கலாம் என்றும் இந்த ஏற்பாட்டுக்கு எகிப்து இணங்காவிட்டால் படை பலத்தைப் பயன் படுத்தியாவது சூயஸ் கால்வாயில் உள்ள எகிப்திய ஆதிபத்யத்தை விரட்டியடித்தாக வேண்டும் என்றும், பிரிட்டிஷ் முதலமைச்சர் அந்தோனி ஈடன் மாநாட்டில் குரலெழுப்பி வருகிறார்.

ஆனால் அந்தக் குரல் உலகப் போரைக் கூவி அழைக்கும் ஆபத்தான குரல் என்று. முன்பு பிரிட்டிஷ் போக்கை ஆதரித்த பாகிஸ்தான் டென்மார்க் போன்ற நாடுகளே இப்போது பேசத் தொடங்கியிருக்கின்றன.

பொதுவாகவே உலகம் முழுவதிலும் எகிப்திய அரசாங்கத்தின் நடவடிக்கை நியாயமானது என்கிற கருத்தும், அதுபோலவே பிரிட்டிஷ் – அமெரிக்க–பிரான்சு நாடுகளின் போக்கு அநீதி நிரம்பியது என்கிற எண்ணமும் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது.

உண்மையும் அதுதான். சூயஸ் கால்வாய், எகிப்திய மண்ணில் அமைந்து கிடப்பது. ஆகவே எகிப்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான அந்தக் கால்வாயை இதுவரை நடத்தி வந்த கம்பெனியில் பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு ஏராளமான பங்குகள் இருக்கின்றன என்றால், அந்தப் பங்குகளுக்குரிய நஷ்டஈட்டைக் கேட்பதற்குத்தான் அந்த நாடுகளுக்கு உரிமை உண்டே தவிர, பங்குகள் வாங்கிய காரணத்தாலேயே என்றென்றைக்கும் கால்வாய் தங்களுக்கே சொந்தம் என்று சொன்னால், அது அறிவுடைமையாகாது. அறநெறியும் அது அல்லது.

இந்த எளிய உண்மையைப் பிரிட்டனும் அதனுடன் தோள் கோத்து நிற்கும் மேற்கு நாடுகளும் இன்னமும் உணராமல் இருப்பதும் போர்க்கோலம் பூண்டு ஆரவாரம் புரிவதும், விட்டேனா பார் எகிப்தை என்று வீண் கூச்சல் எழுப்புவதும் உண்மையில் சிறந்த முறைகள் அல்ல. எகிப்து நாட்டிலுள்ள [illegible]யைத் தானே எ[illegible] உரிமை அந்த நாட்டு ஆட்சிப் பீடத்துக்குத்

186309

தாராளமாக உண்டு. இதனைத் தெளிவாக ஒப்புக்கொண்டு, சூயஸ் கால்வாய் வழியாகப் பல்வேறு நாடுகளின் கப்பல்கள் போகவர எத்தகைய தடையும் எழ இடம் இல்லாதபடி பார்த்துக் கொள்வதே பிரிட்டன் முதலிய நாடுகளின் கடமை. இந்தக் குறிப்பிட்ட பிரச்சினைக்காக நல்லதோர் ஏற்பாட்டை எந்த நாடு தெரிவித்தாலும், அதனைத் தான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக நாசர் பல முறை அறிவித்தும் இருக்கிறார். ஆகவே இந்தத் துறையில், நாசரின் ஒப்புதலுடன் கூடிய ஒரு நல்ல ஏற்பாட்டை வகுக்கும் துறையில் பிரிட்டன் முதலிய மேலை நாடுகள் ஈடுபடுவதே அமைதியை நிலை நாட்டுவதற்குரிய ஒரே ஒரு வழியாகும். இன்றைய சூயஸ் சிக்கல் தீர்வதற்கான சிறந்த முறையும் அதுதான்.

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-8
ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0
Form of Certificate of Income
வருமான நற் சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0
(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

கல்வித் திட்டங்களை நிறைவேற்ற !

புள்ளி விவரம் சேகரிக்கும் யூனிட்டுகள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உள்ள கல்வித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரும்—மாநில சர்க்காரும் ஒன்றுபட்டு வேலை செய்வதற்கு வழி செய்யும் வகையில், திட்டமிடவும் புள்ளி விவரங்கள் சேகரிக்கவுமான 'யூனிட்'டுகளை அமைக்குமாறு டில்லி சர்க்கார், மாநில சர்க்கார்களைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த 'சர்வே'க்கு சென்னை மாநில சர்க்கார் தம்மாலான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக இசைவு தந்திருப்பதாகவும், இதற்காகும் செலவில் மூன்றில் ஒரு பகுதியைக்கூடத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் அறிவித்திருக்கின்றனராம்.

சென்னை மாநிலத்தில் மேற்படி சர்வேயை நடத்த சர்க்கார், ஒரு விசேட அதிகாரியை நியமித்திருக்கிறது.

இந்தச் சர்வே சம்பந்தமாக டில்லியில், மத்திய சர்க்காரால் நடத்தப்பெறும் விவாத அரங்கில் இந்த விசேட அதிகாரி கலந்துகொள்வாராம்.

மேலும், மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்கள், பள்ளி செல்லும் மாணவ, மாணவியரின் தொகை, பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகள் தொகை, ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களையும் இந்த அதிகாரி சேகரிப்பார் என்றும் கூறப்படுகிறது.

கல்விச் சர்வே சிறப்பு அதிகாரி

திரு. கி. இல. பழனி சுவாமியின் வாழ்க்கைக் குறிப்பு

தென்னார்க்காடு மாவட்டத்திலும் சரி செங்கற்பட்டு மாவட்டத்திலும் சரி, மாவட்டக் கழக அதிகாரியாய் இருந்து நல்ல பெயரெடுத்தவர் யார் என்று பொதுமக்களையோ ஆசிரியர்களையோ கேட்டால் அவர்கள் **திரு. கி. இல. பழனி சுவாமி** பி. ஏ. எல். டி. எனக் கூறுவார்கள். காரணம் அன்னாருடைய கல்வித் தொண்டும், இடையறா உழைப்பும், உயர்ந்த ஒழுக்கமுமாகும்.

இவர் செங்கற்பட்டிலே மாவட்டக் கழக அதிகாரியாக இருக்கும் போது முதல் தேதியே சம்பளம் ஆசிரியர்களுடைய கைக்கு கிடைக்கச் செய்யலாம் என்பதைச் செயலிலே நிரூபித்

னுக் காட்டியவர். இவர் தென்னார்க்காட்டில் மாவட்டக் கழக அதிகாரியாக இருக்கும்போது, அப்போது ஆசிரியர்களுக்குக் கிடைத்து வந்த பஞ்சப்படி ரூ. 2 யை சர்க்கார் அளவு 18க்கு உயர்த்த அரும்பாடுபட்டார்.

இவர் பி. ஏ வில் கணிதத்தில் முதல் வகுப்பில் (I Class) தேறியவர். இவர் பிறப்பிலேயே ஆசிரியர் (Born Teacher) என்று கல்லூரி முதல்வர் திரு சாம்பியனால் பாராட்டுதல் பெற்றவர். இவர் நகராட்சி (முனிசிபாலிடி)யில் ஆறு ஆண்டுகளும் மாவட்டக் கழகம் (District Board)களில் ஆறு ஆண்டுகளும், மற்றும் அரசாங்கத்தில் பல ஆண்டுகளும் சேவை புரிந்ததால் நிர்வாக நுட்பமும் அனுபவமும் கொண்டவர். விழுப்புரம், விருதுநகர் ஆகிய இடங்களில் உதவித் தலைமையாசிரியராகவும் தலைமையாசிரியராகவும் பணியாற்றியவர். இவர் கடலூர், கும்பகோணம், முசிறி, விழுப்புரம் வட்டங்களில் பள்ளி கண் காணிப்பாளராகவும், தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் மாவட்டக் கழகக் கல்வி அதிகாரியாகவும் இருந்திருப்பதால் ஆரம்பக் கல்வி, செகண்டரி கல்வி இரண்டைப் பற்றியும் அனுபவம் முதிர்ந்தவர். இவர் செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தில் கல்வி அலுவலாளராயிருந்தபோது, இந்த மாகாணத்துக்கே வழிகாட்டியாக முதல் முதலாக, கல்வி வெளியீடு என்னும் திங்கள் வெளியீட்டை நடத்தி ஆசிரியர்கள் கண்களைத் திறந்தார் என்றால் அது மிகையாகாது.

இவர் எதைப்பற்றியும் சுவை மிகுந்த நிலையிலும், கேட்பவருக்கு அலுப்புத்தட்டாத முறையிலும் நகைச் சுவை ததும்பும் வகையிலும் பேசிடும் ஆற்றல் மிகுந்தவர். இத்தகைய நற்பண்புகளும், ஆற்றலும் அனுபவமும் கொண்ட இவரைக் கல்விச் சர்வே அதிகாரியாக நியமித்த அரசாங்கத்தை மனமாரப் பாராட்டுகின்றோம் வாழ்க! திரு பழனிச்சாமி! **வளர்க! அவருடைய கல்விப் பற்று!**

புத்தகப் பூங்கா

தஸ்தாவேஜுகள் அல்லது பத்திரங்கள் எழுதுவது எப்படி ?

[ஆசிரியர் : டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை, செங்கற்பட்டு ஜில்லா போர்டு பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர். கிடைக்குமிடம் : டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை, தண்டலம் கிராமம், பெரியபாளையம் போஸ்டு, பொன்னேரி மார்க்கம். விலை : அணா 12]

தோண்டத் தோண்டத் தண்ணீரை மேலும் மேலும் அளிக்கும் மணற்கேணி போலக் கற்குந்தோறும் இன்பத்தையும் அறிவையும் அள்ளி வழங்கியபடி இருக்கும் இலக்கியங்கள் தமிழ் மொழியில் ஏராளமாக இருக்கின்றன. அகமும் புறமும் குறளும் சிலம்பும் கலித்தொகையும் குறுந்தொகையும் படிக்கப் படிக்க இனிப்பவையாகும். ஆனால் அன்றைக்கு வாழ்க்கைக்குத் தேவையான தொழில் துறை ஏடுகளும், விஞ்ஞானச் சுவடிகளும், வாழ்க்கை வசதி நூல்களும் தமிழில் மிக மிகக் குறைவு. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கான அரிய முயற்சிகளில் ஒன்றே இந்தப் புத்தகம். அண்டிமாண்டு, ஈடு கட்டிய அடமான பத்திரம், சுவாதீன அடமான பத்திரம், மேடோவர் பத்திரம், நிலத்தை சாகுபடி செய்ய குத்தகை முச்சலிக்கை, வார முச்சலிக்கை, ரொக்க முச்சலிக்கை, உயில், ஸ்வீகார பத்திரம், ஜீவனாம்ச பத்திரம், விடுதலைப் பத்திரம், பாகப் பிரிவினைப் பத்திரம் முதலிய 51 வகைப் பத்திரங்களை, எப்படி எழுதுவது என்பது இந்தப் புத்தகத்தில் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. எண்ணறக் கற்று எழுத்தற வாசித்த கல்வியாளர்கள்கூட இத்தகைய பத்திரங்கள் எழுதத் தம்மால் இயலாமல் இத்துறையில் பயிற்சி மிக்கவர்களையே நாடிச் செல்வதை நாள்தோறும் நாம் பார்க்கிறோம். இந்தக் குறைபாட்டை நீக்கும் தன்மையது இந்தப் புத்தகம். எல்லோருக்கும் பயன்படும் வகையில், மிக எளிய நடையில், குழப்பமோ மயக்கமோ இல்லாத வகையில் எழுதப்பட்டிருக்கிறது இந்த ஏடு. போற்றத்தக்க முயற்சி. ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலேயும் இந்த நூலின் பிரதி ஒன்று இருக்கவேண்டியது அவசியமாகும்.

உரிமை வாழ்வு : [ஆசிரியர் : க. அன்பழகன் எம்.ஏ. கிடைக்குமிடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 1—8—0.]

“ திரு நின்ற என்றன் தமிழகத்துக் கீர்த்தி—உரு நின்று

அழியாமே ஓம்புபடை காட்டி—வருகின்றார் அன்பழகர் என்றொரு நாள் கேட்டு—விரிகின்ற செந்தமிழ்க்கு வெற்றியினி என்றேனே!" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்ட சொல்லின் செல்வர் அன்பழகன் அவர்களுடைய பேனா முனையிலிருந்து பட்டுத் தெறித்த சொல்லோவியங்களின் தொகுப்பு இந்த நூல். மொழியும் அரசும், கலையாலும் கருநாகமும், ஆதிக்க மொழி, தமிழும் திராவிடமும், மலரும் தனியரசு, வடக்கும் தெற்கும், உரிமை வாழ்வு முதலான தலைப்புகளைக் கொண்ட பத்து அரிய கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. தண்டமிழ் மொழியின் மீது தணியாத காதல்—அந்தக் காதலின் விளைவாகத் தோன்றும் ஆழமான ஆராய்ச்சி—அந்த ஆராய்ச்சியின் முடிவாக விளையும் அற்புதமான கருத்துக்கள்—அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றொழுக்குப் போன்ற நடை—இவற்றின் தொகுப்பே இந்த இன்சுவை ஏடு. செந்தமிழின் சீர்த்தியை, இந்தி ஆதிக்கக் கொடுமையை, இன்றைய தமிழகத்து அரசியல் நிலையை, அங்கே உரிமை வாழ்வு அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிவதற்கான வகையை, ஒவ்வொன்றையும் பற்றிய விளக்கம் நெஞ்சை அள்ளும் தன்மையதாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டு இளைஞர்கள் அள்ளிப் பிடித்து ஆர்வத்துடன் விழுங்குதற்குரிய அறிவு உணவு ஏராளமாக இருக்கிறது இந்தக் கருத்துக் கருவூலத்தில். இதோ ஓர் எடுத்துக் காட்டு: "உரிமை என்ன சுக்கா, மிளகா, பாகா, பருப்பா, விலைக்குக் கிடைக்க? உரிமை ஓர் உயர்நிலை. அது, அந்நிலை எய்த விலை தந்தவர்களுக்கே சாலும்! விலையென்றால் பணமல்ல, பொருளல்ல, வெறும் உழைப்புமல்ல. உள்ளங்கனிந்த அருஞ்செயல் — தியாகம்." எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய இத்தகைய சொல்லாசனங்கள் நூல் முழுதும் நிரம்பியிருக்கின்றன.

பூக்குடலை [ஆசிரியர்: கே. ஜீ. இராதாமணாளன். கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை ரூ. 2—0—0.]

இன்றைய தமிழ்நாட்டு இளைஞர்களின் உள்ளத்தை அள்ளிக் கொண்ட தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் நண்பர் இராதாமணாளன். அவரால் தீட்டப்பட்ட பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு இந்தப் புத்தகம். ஒவ்வோர் சிறுகதையும் தேனாக, தென்றலாக, நற்கருப்பஞ்சாறாக இனிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ்ச்சுவை, வீரச்சுவை, இன்பச் சுவை, அவலச் சுவை, எல்லாச் சுவைகளும் நிரம்பிய கருத்துக் கனியாக விளங்குகிறது இந்த ஏடு. சிறப்பாகப் பூக்குடலை, திருதமாளா ஆகிய இரு

கதைகளும் உள்ளத்தை உருக வைக்கும் தன்மையனவாக இருக்கின்றன. பேய்க் கரும்பு என்னும் கதையில், கலை கலைக்காகவே—மனித வாழ்க்கையின் முற்போக்குக்காக அல்ல என்று வாதாடுவோரின் மனமயக்கம் எத்தகையது என்பது தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கிறது. வரலாற்று நிகழ்ச்சிகளை மனத்தில் கொண்டு அவைகளுக்கு ஊரும் பேரும் புனைந்து உருவாக்கப்பட்ட சிந்தனையின் சாம்பல், மஞ்சிகை ஆகிய கதைகளில் கற்பனையின் திறமை மிக அழகாக அமைந்திருக்கிறது. ஒரு முறை இரு முறை அல்ல, பலமுறை உலவி மகிழவேண்டிய இலக்கியப் பூங்கா இந்த நூல்.

அறிவுக் கதிர்

இளைஞர்களே! கிராமங்களுக்குச் செல்லுங்கள் எழுந்திருங்கள்! விழியுங்கள்!! என்று அங்கு வீர முழக்கம் செய்யுங்கள். அவர்களின் தற்கால நிலையை அவர்களே உணரும்படி அவர்களுக்குப் புத்தி கூறுங்கள். மிக்க இலகுவான எளிய நடையில் சாஸ்திரங்களில் பாந்து கிடக்கும் மேலான உண்மைக் கருத்துக்களை அவர்களுக்கு விளங்க உரையுங்கள்.

உங்கள் சகோதரர்களுக்கு வழி காட்டியாக இருப்பதை விட்டு, அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். வழி காட்ட வேண்டுமென்னும் கொடிய பைத்தியமே பெரும் தலைவர்களைக் கூட பல தருணங்களில் கெடுத்துக்கொண்டிருக்கிறது.

கோவில் கட்டுவதற்காகவும், நைவேத்தியங்களுக்காகவும், திருவிழாக்களுக்காகவும் செலவு செய்யும் பொருள்களை ஏழையான, உயிருள்ள தெய்வங்களின் உணவுக்காக உபயோகப்படுத்துங்கள்.

வாலிபர்களே! எதிர்கால உலகம் உங்கள் வசமிருக்கிறது. பணியால் நைந்து, பசியால் வாடி, தாழ்மையாலும் ஒடுக்கத்தாலும் உலரும் மக்களின் வறுமையையும் அறியாமையையும் ஒழிப்பதற்குப் பாடுபடுங்கள்.

கற்ற இளைஞர்கள், பாமர மக்களின் வீடுதோறும் சென்று, கற்பிப்பதற்காக ஏற்ற வழிகளைத் தேடவேண்டும்.

வாழ்க்கையில் நிகழும் செயல்கள் அனைத்தும் மனதோடும், அதன் எண்ணங்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனமே அவற்றிற்குக் காரணம்.

பள்ளிக்கூட அங்கீகாரத்தைத் திரும்பப் பெறல்

டி. பி. ஐ. உத்தரவு தள்ளுபடி

சென்னை—செப். 5.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கணியூரில் உள்ள தண்டபாணி உதவிபெறும் ஆரம்பப் பாடசாலையின் ஆசிரிய மானேஜரால் அனுப்பப்பட்ட மனுவை, இன்று, சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி பி. ராஜகோபாலன் அவர்கள் ஏற்றுக்கொண்டதோடு, அந்தப் பள்ளிக்கூடத்தின் அரசாங்க அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றதாக சென்னைக் கல்வி இலாகா டைரக்டரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் செல்லாது என்று தள்ளுபடி செய்துவிட்டார்.

மனுதாரர், (மேற்படி பள்ளிக்கூட மானேஜர்) 1917ல் தன்னுடைய பள்ளிக்கூடம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே அரசாங்க அங்கீகாரத்தையும் உதவித் தொகையையும் பெற்று வருவதாகத் தெரிவித்திருக்கிறார் 16—2—1955 அன்று, கோவை மாவட்ட டி. இ. ஓ விடமிருந்து மேற்படிமானேஜருக்குஅறிவிப்பு ஒன்று வந்தது. கல்வி இலாகா அதிகாரிகள் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட வந்தபோது மானேஜர் அதற்கு இணங்காததால், அந்தப் பள்ளிக்கூடத்தின் அரசாங்க அங்கிகாரத்தையும் உதவித் தொகையையும் 1—12—55 முதல் நிறுத்திவிட முடிவு செய்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மானேஜர் உடனே அந்தக் குற்றச் சாட்டுக்கான தன்னுடைய விளக்கத்தை எழுதி அனுப்பினர். ஆனல் அந்த விளக்கத்திற்குப் பதிலாக எந்த விடையும் அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக 13—5—55 அன்று, டிபுடி இன்ஸ்பெக்டரிடமிருந்து மானேஜர்மீது பத்துக் குற்றச் சாட்டுகள் கொண்ட அறிக்கையொன்று வந்தது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உம்முடைய சமாதானத்தை எழுதி அனுப்பவும் என்று குறிப்பிட்டிருந்த அந்த அறிக்கையில், பள்ளிக்கூட அங்கீகாரத்தையோ உதவித் தொகையையோ திரும்பப் பெறுவது பற்றிய எத்தகைய குறிப்பும் இல்லை. தன்மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றங்களை மறுத்து 21-5-55 அன்று கடிதம் அனுப்பினர். அடுத்தாற்போல் 27—7—55 அன்று, மாவட்ட டி. இ. ஓ. மானேஜர் மீது 12 குற்றச்சாட்டுகள் கொண்ட கடிதம் ஒன்றை அனுப்பினர். அதற்கும் 6-8—55 அன்று மானேஜர் விடையெழுதி அனுப்பிவிட்டார்.

12-9-55 அன்று, 1-10-55 முதல் பள்ளிக்கூட அங்கீகாரத்தையும் உதவித் தொகையையும் திரும்பப் பெறுவதாக, மாவட்ட டி இ ஓ. உத்திரவு பிறப்பித்துவிட்டார். அந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டுமென்று, மானேஜர், டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கும், பிறகு கல்வி இலாகா டைரக்டருக்கும் மனுச் செய்துகொண்டார். ஆனல் அவர்கள் டி. இ. ஓ வின் உத்தரவே சரியானது என்று சொல்லி, மானேஜரின் மனுவை ஒப்புக் கொள்ளவில்லை.

எனவே இறுதியில், மானேஜர், மேற்படி உத்தரவுகளையெல்லாம், செர்டியாரரி ரிட் முறைப்படி தள்ளுபடி செய்யும்படிக் கோரி உயர்நீதிமன்றத்திற்கு மனுச் செய்து கொண்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி இராஜகோபாலன் அவர்கள், பள்ளிக்கூடத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்து இறுதியாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், எந்தக் காரணத்திற்காக அங்கீகாரம் ரத்து செய்யப்படுகிறது என்பது விளக்கப்படவில்லை என்றும், அந்த ஒரு காரணத்தாலேயேகூட அந்த உத்தரவு செல்லாததாக ஆகிவிடும் என்றும் தெரிவித்திருக்கிறார். அதோடு இந்த வழக்கில், பள்ளிக்கூட அங்கீகார ரத்து உத்தரவு டி. இ. ஓ வால்தான் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், ஆனல் அப்படிப்பட்ட உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் டி. இ. ஓ வுக்குக் கிடையாது—கல்வி இலாகா அதிகாரி (டி. பி. ஐ)க்குத்தான் உண்டு என்றும், ஆனல் டி. இ. ஓவின் உத்தரவை ஆதரித்து வெளியிடப்பட்ட இலாகா அதிகாரியின் உத்தரவில், அங்கீகார ரத்துக்கான காரணங்கள் தரப்படவில்லை என்றும், எனவே அது செல்லாததாக ஆகிறது என்றும் தெரிவித்து, நீதிபதி, டி. இ. ஓவின் முதல் உத்தரவையும், அதனை ஆதரித்து, டிவிஷனல் இன்ஸ்பெக்டர், டி. பி. ஐ ஆகியோர் வெளியிட்ட உத்தரவுகளையும் தள்ளுபடி செய்துவிட்டார்.

—"மெயில்" 5—9—56

சென்னை அரசாங்கம்

நஷ்டஈடு பற்றிய உத்தரவு

[தமிழ் மொழிபெயர்ப்பு]

சென்னை அரசாங்கத்தின் கல்வி இலாகாவிலிருந்து 9-7-56 அன்று, ஜி. ஓ. எம்எஸ். எண் 1328 என்னும் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது:—

3—10—55, 5—5—56 ஆகிய தேதிகளில் உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளின் மேனேஜர்கள் சங்கத்திலிருந்து எழுதப்பட்ட கடிதங்களையும், கல்வி இலாகா டைரக்டரிடமிருந்து 1—5—56ல் அனுப்பப்பட்ட நஷ்டஈடு பற்றிய 1463 B 7—53 என்னும் குறிப்பையும் அரசாங்கம் படித்துப் பார்த்தது. 14—9—55ல் அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட ஜி. ஓ. எண் 1546ல் குறிப்பிடப்பட்டுள்ள நஷ்ட ஈட்டு விகிதங்களை உயர்த்த வேண்டுமென்று கோரி, உதவிபெறும் ஆரம்பப் பாடசாலை மேனேஜர் சங்கத்திலிருந்தும், அதுபோன்ற ஏனைய பல சங்கங்களிலிருந்தும் அனுப்பப்பட்ட வேண்டுகோள்களைக் கருத்துடன் கவனித்துப் பார்த்த பிறகு, அரசாங்கம், **உதவித் தொகை பற்றிய விதிகளைத் திருத்தி அமைக்கும் வரையில்,** 1956-57ம் ஆண்டிற்கு, தற்போது தரப்பட்டுவரும் நஷ்ட ஈட்டு விகிதங்களே தொடர்ந்து தரப்படவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது.

ஆர். ஏ. கோபாலசாமி
கல்வி இலாகா செயலாளர்.

அறிவுக் கதிர்

தேசிய உணர்ச்சியானது தேசியக் கல்வியினின்றுமே உண்டாகும். தேசியக் கல்வியே சமுதாய ஒற்றுமை, சமுதாய உணர்ச்சி, சமுதாய தர்மம், சமுதாய உரிமை முதலியவைகளை உண்டாக்கும்.

வாழ்க்கையானது சலனமுள்ளது; பரந்த கோரிக்கை கொண்டது; தீவிர அபிவிருத்தியைப் பற்றியது. இம்மூன்றும் வாழ்க்கையின் தன்மைகளாம். இவைகளின்றி வாழ்க்கை இல்லை.

இரு சேமிப்பு இடங்கள்

(D. E. மாசிலாமணி, ஆசிரியர்,
போதனாமுறைப்பள்ளி, விருதம்பட்டு.)

சாக்ரடிஸ், ஒருநாள் கிராமத்தினர் கூடி அளவளாவும் மேடையில் அமர்ந்திருந்தார். அவ்வழியாக பட்டாளத்திற்குச் சென் ஓய்வு பெற்ற ஜமேதார் ஒருவர் கடந்து செல்வதைக் கவனித் பெரியார் "நீர் எங்கே விரைவாகச் செல்கிறீர்?" என்று கேட்டார்.

"நான் எனது உபகாரச் சம்பளத்தை (Pension) பெறுவதற் காக அரசாங்க சேமிப்பு நிதிக்குச் செல்கிறேன்."

"அந்தச் சேமிப்பு நிதியில் முக்கியமாக என்ன வேலை நடக் கிறது?"

"ஐயா! அதுதான் அரசாங்கத்தின் பொக்கிஷம்; நாட்டின் பணமெல்லாம் அங்குதான் குவிந்திருக்கும்; வசூலிக்கப்படும் வரிக ளெல்லாம் அவ்விடத்திற்குத்தான் செல்கின்றன."

"அப்படியானால்... உங்கள் கிராமத்திலும் சேமிப்பு இடங்கள் வைத்திருப்பீர்களென்றே நினைக்கிறேன்."

"சாக்ரடிஸ் பெரியாரே! நீர் என்ன சொல்கிறீர்களென்றே எனக்கு விளங்கவில்லை. கிராமத்தினராகிய நாங்கள் ஏழைகள், எங் களுக்கேது சேமிப்பு இடங்கள்?"

"உங்கள் கிராமத்தில் நான் சொல்லிய ஆலோசனைப்படி ஒவ்வொரு தெருவிலும் ஆழமான குழி தோண்டி அதில் குப்பை, சாணம், இலை தழை, சாம்பல் இவற்றையெல்லாம் ஒழுங்காகக் கொட்டி வருகிறீர்களா?"

"ஐயா! நீங்கள் அடிக்கடி வற்புறுத்தியதின் பேரில் எங்கள் தெருவில் ஆழமான குழி தோண்டி அதில் குப்பை, சாணம், இலை தழை, சாம்பல் அனைத்தையும் கொட்டி பல மாதங்கள் மக்க வைத்து, பின்பு அதனை எங்கள் நிலங்களுக்கு எருவாக உபயோகித்து வருகிறோம்."

"அதனால் விளைச்சலில் மாறுதல் ஏற்பட்டதா?"

"அதற்குச் சந்தேகமென்ன? நீர் கூறிய இந்த சிறு ஆலோசனையைக் கடைப்பிடித்ததில் இரு மடங்கு விளைச்சல் எங்கள் நிலத்தில் விளைந்தது. பரம்பரை விவசாயிகளும் உணராத இந்த ஆலோசனையை நீர் எங்களுக்குத் தந்ததை நாங்கள் எப்படி மறக்க முடியும்? நீர் போதித்து வந்திருக்கும் பல சீர்திருத்தங்களில் சுலபமான

னும் பெரு நன்மை விளைவிக்கக் கூடியதுமானது இதுவே என்று நான் நினைக்கிறேன்."

"நண்பரே நீர் ஆயத்தம் செய்து வைத்திருப்பது வெறும் குழி மாத்திரமல்ல; அது ஒரு சேமிப்பு இடம். பொக்கிஷ நிதி என்றுக் கூட சொல்வதில் தவறில்லை!"

"ஆம் அறிஞரே! நீர் சொல்வதுண்மை; அதனை ஒரு சேமிப்பு இடம் என்று ஒப்புக்கொள்கிறேன்; அது விவசாயிகளுக்கும், கிராமத்தினருக்கும் இன்றியமையாத ஒரு பொக்கிஷந்தான்!"

"அப்படியானால் நீர் இப்போது கிராம சேமிப்பு நிதியில் ஒரு அங்கத்தினர் அல்லவா?"

"ஆம், அந்த சேமிப்பு நிதி எவர்க்கும் பயன் தரக்கூடியது. சிறு முயற்சி கொள்ளும் எத்தகையவரும் அந்நிதியில் சேர்ந்து நலன் பெறுதல் முடியும்."

"உமது விளைச்சலினால் கிடைக்கும் அதிகப்படியான பணத்தையும், உமது உபகாரச் சம்பளத்தில் ஒரு பகுதியையும் நீர் பண சேமிப்பு நிதியில் போட்டு வருகிறீரா?"

"ஆம் ஐயா, அந்த வித சேமிப்பிலும் நான் ஜாக்கிரதையாயிருக்கிறேன்."

"சபாஷ்! நீர் ஒரு விவேகமான மனிதன்! உமது அதிகப்படியான பணம் சேமிப்பு நிதிக்கு செல்கிறது! இதனால் உமக்கு இரு சேமிப்பு இடங்கள் இருக்கின்றன என்றே சொல்லலாம். இந்த விதமாய் இரண்டு சேமிப்பு இடத்தில் பங்கு கொள்ளும் எந்த விவசாயிக்கும், கிராமத்தினருக்கும் தேவையே ஏற்பட முடியாது."

"ஆம்; அது உண்மை; முதலில் உமது ஓயாத வற்புறுத்தலின் பேரிலேயே இந்த சேமிப்பு விஷயங்களில் ஆர்வம் கொண்டேன்; இப்போதோ அதன் மேன்மையை உணர்ந்து பணத் தேவையை அறியாது நலமுடன் வாழ்கிறேன்."

"நண்பரே; உமது தேவை பூர்த்தியடைந்துவிட்டது, அதனால் நீர் செய்யவேண்டிய சேவையொன்று உண்டு. இந்த நல்ல ஆலோசனைகளை அடிக்கடி பிறருக்கும் எடுத்துச் சொல்ல மறக்காதீர். அதுவே நீர் எனக்குச் செய்யக்கூடிய கைமாறு; வணக்கம்."

"பெரியாரே! வணக்கம், உமது விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிப்பேன்."

சென்னை மாகாண எயிடட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

சம்பள நஷ்ட ஈடு

1956–57க்கும் G. O. No. 1546. dated 14–9–55 அரசாங்க உத்தரவின்படி புதிய சம்பள விகித நஷ்ட ஈடு கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றது. புதிய உத்தரவின் நகல் ஒன்றை இவ்விதழில் பிரசுரித்துள்ளோம். முதல் வகுப்புக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள 0—2—0 0—3—0, 0—4—0 போன்ற குறைந்த அரசாங்க சம்பள விகிதத்தை மாற்றி அமைக்கும்படி கடந்த இரண்டு ஆண்டுகளாக பல மகா நாடுகள் கூட்டியும், சங்கக் கூட்டங்களை நடத்தியும் பல கிளர்ச்சிகளைச் செய்துகொண்டு வந்துள்ளோம். அப்படி இருந்தும் அரசாங்கம் நாம் எடுத்துக் கூறிய வாதங்களையும், குறைகளையும் புறக்கணித்து, தாங்கள் போட்ட பழைய உத்தரவுபடியே குறைந்த சம்பள விகிதத்தை நஷ்ட ஈடாகப் பெறும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இதன் விளைவு தற்சமயம் உடனடியாக பாடசாலைகளை பாதிக்கப்படா விட்டாலும், நாளுக்கு நாள் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வேண்டிய நிர்வாகஸ்தர்களின் ஊக்கம் குறைந்துகொண்டு வருகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் திறமையாக நடைபெறும் பல பாடசாலைகள் திறமையற்றுப்போவதுடன், மூடவேண்டிய நிலை ஏற்பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

டாக்டர் P. வரதராஜலு நாயுடு M. L. A. அவர்களின் துணைகொண்டு மாகாண சங்கத்தின் தலைவரும், காரியதரிசியும் அரசாங்க கல்வி இலாகா காரியதரிசியை சென்ற மாதம் பேட்டிகண்டு, தற்போது ஏற்பட்டுள்ள நிலையை விளக்கியிருக்கின்றோம். காரியதரிசி அவர்கள் நவம்பர் முதல் தேதிக்குப் பிறகு தமிழ் நாடு தனியாகப் பிரிந்ததும், புது மாகாணத்தின் கல்வி நிலையை ஆராய்ந்த பிறகு எயிடட் பள்ளிகளின் சம்பள நஷ்ட ஈடு பற்றி புனராலோசனை செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

P. வீரராகவன்	A. R. சேஷாசலம்
தலைவர்	பொதுக் காரியதரிசி

சமூக நூல்
பயிற்சிப் புத்தகங்கள்

(Social Study Record Books)

6, 7, 8 வகுப்புகளுக்கு

6, 7, 8 வகுப்புகளுக்கு தனித்தனியே பயிற்சிப் புத்தகங்கள் திரு. T. S. உமாபதி, M.A., L.T., அவர்களால் எழுதப்பட்டு, உயர்ந்த காகிதத்தில் (Drawing Paper) அச்சடித்து பிரசுரிக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் விலை எல்லா வகுப்புகளுக்கும் அணா 10. மூன்று வகுப்புகளுக்கும் மாதிரிப் பிரதி வேண்டுவோர் ரூ. 1-0-0 M. O. அனுப்பவும்.

மானேஜர்,
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

186389

அறிவுக் கதிர்

சந்தர்ப்பம் வரும் எனக் காத்திருப்பது சித்தம் குறைந்த செயலாகும். எனவே, சந்தர்ப்பத்தை சிருஷ்டிக்கவேண்டும்.

தேசமே உங்கள் கோவில். அது உங்கள் ஒவ்வொருவரிலும் திகழ்வதாக எண்ணுங்கள்.

உங்கள் சகோதரர்கள் தாழ்மையான நிலையிலிருக்கிறார்களென்றால், அதற்குக் காரணம் நீங்களாய்த்தான் இருக்கக்கூடும்.

பெரும் நோக்கத்திற்காக உங்கள் உயிரையும் அளிக்கத் தயாராயிருங்கள்.

மனித சமூகம் மதிக்கவில்லையென்று, சத்தியத்தை அவமதிக்க வேண்டாம்.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN at the 'Venkatesan Press,' 94-95, New St., Mannady, Madras-1

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A. L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 4 0	25	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0 5 0	25	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0 8 0	25	19-5-'54
நான்காம் வகுப்பு	0 9 0	25	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 10 0	25	19-5-'54

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1-2-0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு	0 5 0	28	19-5-'54
பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு	0 5 0	29	19-5-'54

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0-5-0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. SC., L. T.

மூன்றாம் வகுப்பு	0 5 0	...	...
நான்காம் வகுப்பு	0 7 0	18	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 8 0	18	19-5-'54

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0-10-0 அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

D. சிவசங்கர ராவ், B. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0 5 0	11	19-5-'54
நான்காம் வகுப்பு	0 7 0	11	4-4-'56
ஐந்தாம் வகுப்பு	0 8 0	10	4-4-'56

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0-10-0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B. A., B. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0	8	0	6	4–4–'56
நான்காம் வகுப்பு	0	10	0	6	4–4–'56
ஐந்தாம் வகுப்பு	0	12	0	4	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றும் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	9	4–4–'56
ஐந்தாம் வகுப்பு	0	9	0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M. A., L. T.

4, 5–வது வகுப்புகளுக்கு	0	5	0	8	4–5 '55

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0	5	0	13	19–5–'54

V. K. சேஷாத்திரி, B. A. L. T.

மூன்றும் வகுப்பு	0	7	0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	4	4–5–'55
ஐந்தாம் வகுப்பு	0	12	0	9	4–4–'56

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer—I 0—5—0.

மாதிரிப் பிரதிக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Venkatesan Press, Madras-1.